# TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்

# TNEB EMPLOYEES' FEDERATION NEWS

Volume - 7 Issue - 4 November 2024 | Monthly Magazine | Bilingual | Price - Rs.10/-

மலர் - 7 இதழ் - 4 நவம்பர் 2024 | மாத இதழ் | Tamil & English | விலை ரூ. 10/-

ஆசிரியர் : அ.சேக்கிழார்











## தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் வெளியீடு










தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு
எம்ப்ளாயீஸ் பெடரேஷன் (TNEBEF)
பதிவு எண் : 3600 / CNI, இணைப்பு : UTUC
மாநில செயற்குழு கூட்டம்
TNEBEF






மாநில செயற்குழு கூட்டம்
UTUC
TNEBEF
UTUC
TNEBEF






தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு
எம்ப்ளாயீஸ் பெடரேஷன் (TNEBEF)
பதிவு எண் : 3600 / CNI, இணைப்பு : UTUC



**TNEB**
**எம்ப்ளாயீஸ்**
**பெடரேஷன் நியூஸ்**

மலர்- 7 ✧ இதழ்-4 ✧ நவம்பர் 2024

நிர்வாக ஆசிரியர்


**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு

**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**K. நாராயணமூர்த்தி**
**K. செல்வராஜூ**
**R. ஜெயராமன்**
**V. சிவராணி**

செயலாளர் (வெளியீடு)

**A. செந்தில்குமார்**




தலைமை அலுவலக முகவரி :
TNEB எம்ப்ளாயீஸ்
பெடரேஷன்

39/101, சிங்கண்ணா தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.

✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com
: 9092268200
https://www.tnebfederation.org

# ஒப்பந்த தொழிலாளர்களையும் பகுதி நேரப் பணியாளர்களையும் பணியில் அமர்த்திடுக!

**க**ளப்பணியிடங்களில் உள்ள இடங்களைப் பூர்த்தி செய்தால் இம்மழைக் காலத்தில் தடையற்ற மின்சாரத்தை வழங்கி மக்களுக்குச் சேவை செய்ய முடியும், மின்கட்டண வருவாயும் பெருகும். நகரியம் மற்றும் கிராமப்பகுதிகள் 11KV மின்பாதைகளில் Breakdown ஏற்பட்டால் சீர்செய்து மின்சாரம் வழங்க பல மணி நேரம் ஆவது வழக்கம், காரணம் நீண்ட தொலைவாக பல கிலோ மீட்டர் தூரம் இருப்பதால் Line Patrol செய்வதும், பழுதானவைகளை சரி செய்யும் குறைந்தபட்சம் தேவைப்படும் பணியாளர்கள் இருந்த காலங்களில்!

ஆனால், இன்று பிரிவுக்கு ஒருவர் அல்லது இருவர் உள்ள நிலை - கிராமப் பகுதிகளில் 20 பணியாளர்கள் 7 உதவியாளர், 7 கம்பியாளர், 2 மின்பாதை ஆய்வாளர், 2 ஆக்க முகவர் CA, CI என இருந்த காலம் போய் 2 அல்லது 3 தொழிலாளர்கள் உள்ள நிலை ஒரு பக்கம்.

தமிழகத்தில் 11 மின்வட்டங்கள் தவிர்த்து ஏனைய மின்வட்டங்களில் பணியமர்த்தப்பட்ட 10000 கேங்மேன் பணியாளர்கள் அனைத்து பணிகளையும் செய்கின்ற சூழ்நிலை அனைத்து பிரிவு அலுவலகங்களிலும் Contractor ஆட்களை வைத்து வேலை செய்கிறார். வேலைக்கான பணம் பட்டுவாடா ஆகிறது. யார் Contractor எடுத்தார். யார் வேலை செய்கிறார் என்பதெல்லாம் வாரியம் பார்ப்பதில்லையாம், வேலையை தந்திடுவோர்கள், பணம் கொடுத்திடுவார்கள்.

பெரும்பான்மையான இடங்களில் பிரிவு அலுவலகத்தின் முதன்மையான பணியாளரே சொந்தமில்லாத பெயரில் ஒப்பந்தகாரராகி ஆட்களை வைத்து வேலை செய்வதும் அனைவரும் அறிந்த ஒன்றே. ஆனால், ஒவ்வொரு மாதமும் என் அலுவலகத்தில் ஒப்பந்த தொழிலாளரை வைத்து வேலை செய்யவில்லை என்ற சத்தியபிரமாணம் ராமன் கிழித்த கோட்டை லட்சுமணன் தாண்டாதது போல அச்சுபிறழாமல் அப்படியே எழுதி அனுப்பிடுவார்கள்.

மழை பெய்தால் புயலடித்தால் லாரிகளும், வேன்களும் ஒப்பந்த தொழிலாளர்களை அள்ளிக் கொண்டு பணி செய்ய வைப்பதும், அந்த நேரத்தில் ஆசைவார்த்தைகளை

வாக்குறுதிகளாக அளித்து நிச்சயம் நிரந்தரம் செய்வோம் என்பதும் பின்னர் அடுத்த மழை வரும் வரை அதைப் பற்றி கவலைப்படாமல் இருப்பது வாடிக்கையும் வேடிக்கையும் தான்.

1957ல் துவங்கப்பட்ட காலத்திலிருந்து 1967க்கு பிறகு 40000 தினக்கூலி தொழிலாளர்கள் நிரந்தரம் 1998ல் 18006 மற்றும் 1.5.99 தேதியிட்ட பணிவரன்முறைக்கு அனல் மின்நிலையத்தில் 5000 மேற்பட்டோர் 10.08.2007ல் 21600 பேர் 20.02.2008 உத்தரவின்படி 4000க்கு மேற்பட்ட ILO உத்தரவு பெற்றவர்கள் 10000 கேங்மேனில் பாதிக்கும் குறைவாக ஒப்பந்த தொழிலாளர்களது வந்தவர்கள் மற்றும் கேங்மேன் பணிக்காக காத்து கிடக்கும் 5000 கேங்மேன் பணிக்கு தேர்வு பெற்றவர்களும் ஒப்பந்த தொழிலாளர்களே! மின்சார வாரியத்தில் வளர்ச்சியில் 75% பங்கு ஒப்பந்த தொழிலாளர்கள் பணியாற்றி நிரந்தரம் பெற்றவர்கள்தான் என்பதை இன்று ஏனோ நினைத்து பார்க்க தயக்கம் வந்திருக்கிறது.

ஒப்பந்த தொழிலாளர்கள் நிரந்தரம் கேட்கிறார்கள் என்பதற்காக தகுதியை உறுதிபடுத்தும் BP No. 9ஐ 09.11.2008ஐ ரத்து செய்து மகிழ்ந்திருக்கிறது வாரியம்.

ILO மற்றும் நீதிமன்ற வழக்கு உத்தரவுகள் இருந்தால் சென்னையில் பிரபல வழக்கறிஞர் ஒருவர் துணையுடன் (பல கோடிகளை சம்பளமாகக் கொடுத்து) உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம் சென்னை உயர்நீதிமன்ற கிளை மதுரை என அனைத்து இடங்களும் வாரியம் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு எதிராக வாதாடி வெற்றிவாகை சூடி வருகிறது.

மின்சார வாரியத்தை நம்பி பணிக்கு வந்து செல்லும் ஒப்பந்த தொழிலாளர்களை நம்பி பணிகளைத் தருகிறார்கள், செய்கிறார்கள், நிரந்தரம் என்றால் மட்டும் ஒப்பந்த தொழிலாளர் என்ற வார்த்தையைக் கேட்டால் முகம் சுளிக்கிறார்க்ள. இது நியாயமான போக்கல்ல, வாரியமும் அரசும் கவலையோடும், கனிவோடும் பரிசீலித்து ஒப்பந்த தொழிலாளரை நிரந்தரம் செய்திட முன் வரவேண்டும்.

40000 தினக்கூலி தொழிலாளர்களை நிரந்தரம் செய்ததும் 21600 ஒப்பந்த தொழிலாளர்கள் ILO 4000 என 25000க்கு மேற்பட்டவர்களை நிரந்தரம் செய்ததும் கழக அரசின் தளகர்த்தா டாக்டர் கலைஞர் அவர்கள்தான் என்பதால் இன்றைய கலைஞராக விளங்கும் மாண்புமிகு தளபதியார் ஆட்சியில் நிர்நதரம் செய்திட வேண்டும் என்பது அனைவரின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

பகுதி நேரப் பணியாளர்களை பிரிவு அலுவலகங்களில் கூட்டி பெருக்கி கழிவறை சுத்தம் செய்து தண்ணீர் எடுத்து வைக்கக் கூட நியமிக்காமல் இருப்பதற்கு ஆயிரம் காரணம் சொல்வது நியாயமில்லை. 1000த்திற்கு மேற்பட்ட பெண்களின் எதிர்காலம் வாரியத்தின் கையில் உள்ளது. தொழிலாளர் நலன் காக்கும் நல்லரசு பகுதி நேரப் பணியாளர்களை பணியில் அமர்த்திட வேண்டும்.

நவம்பர் 9 மற்றும் 10 தேதிகளில் திருச்சியில் நடைபெற்ற செயற்குழு தீர்மானங்களை நிறைவேற்றிட வாரியம் மற்றும் அரசினுடைய கவனத்திற்கும் எடுத்து செல்வோம். டிசம்பர் 14, 15, 16 தேதிகளில் நடைபெறவுள்ள பொதுக்குழுவில் தீர்க்கப்படாத பிரச்சனைகளுக்கு தீர்வு காண அடுத்த கட்ட நகர்வை நோக்கி சென்றிட முடிவெடுப்போம்.

***– ஆசிரியர்***

# மாநில செயற்குழு அறிக்கை

நாள்: 12.11.2024

**வணக்கம் தோழர்களே!**

2024 நவம்பர் 9 மற்றும் 10 சனி, ஞாயிறு இரு நாட்கள் மாநில செயற்குழு கூட்டம் திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள ஹோட்டல் அஜந்தாவில் மாநில தலைவர் தோழர். S. மணிகண்டன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவர், கடந்த இரண்டு மாதங்களில் தமிழகம் முழுவதும் நடைபெற்றுள்ள கிளைகளின் செயற்குழு மற்றும் விரிவடைந்த செயற்குழு கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்றுள்ளதற்கு பாராட்டு தெரிவித்தும், UTUC அகில இந்திய மாநாட்டில் நமது பங்களிப்பு குறித்து விவரித்தும், UTUC தேசிய குழு உறுப்பினர்களாக தேர்வு பெற்றுள்ள நமது நிர்வாகிகளுக்கு வாழ்த்துகள் தெரிவித்தும், உலக அளவில் உள்ள அரசியல் நிலைகள், இஸ்ரேல்பாலஸ்தீன போர், இலங்கையில் ஜனநாயக ரீதியாக அதிபர் மாற்றம், தமிழக அரசியலில் புதிய அரசியல் கட்சிகள் துவக்கம் போன்றவற்றை மேற்கோளிட்டு நாட்டின் அரசியல் நிலைகள் குறித்தும், தொழிற் சங்க ரீதியாக தொழில் மற்றும் தொழிலாளர் நலன்கள் பாதுகாப்பதில் நாம் முன்னணியில் நிற்க வேண்டிய அவசியம் குறித்தும் தலைமை உரையில் எடுத்துரைத்தார்.

பொதுச் செயலாளர் கடந்த செயற்குழுவிற்கும் இச்செயற்குழுவிற்கும் இடைப்பட்டக் காலத்தில் நடந்துள்ள பணிகள், இயக்க ரீதியான செயற்குழு கூட்டங்கள், கிளைகளில் எடுக்கப்பட்டுள்ள ஸ்தல போராட்டங்கள், தீர்மானங்கள் ஆகியவற்றைக் குறிப்பிட்டு பேசினார்.

மேலும் நமது அமைப்பிற்கு புத்துணர்ச்சியூட்டும் செயலாக கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கை கூடுதலாக்க வாய்ப்புள்ள அளவில் கிளைகள் பணியாற்ற வேண்டுமென குறிப்பிட்டு பேசினார்.

மின்சார வாரியத்தில் மூன்றாண்டுகளாக பணியாற்றிய வாரிய தலைவர் பணிமாறுதலில் விடை பெற்றுள்ளதும், புதிய வாரிய தலைவர் பதவியேற்றதையும் குறிப்பிட்டு பேசி தீர்க்கப்படாமல் உள்ள பல்வேறு கோரிக்கைக்கு தீர்வுக்காண வாரியத் தலைவரிடத்திலும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களிடத்திலும் தொடர்ந்து பேச வேண்டியுள்ளதையும் குறிப்பிட்டார்.

2024 டிசம்பர் மாதத்தில் நடைபெற உள்ள மாநில பொதுக்குழுவிற்கான தயாரிப்புகள் குறித்தும், நமது அமைப்பை மேலும் வலுவுள்ளதாக ஆக்கிட நாம் எடுத்திட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனைகள் வழங்கி பேசினார்.

பொருளாளர் 2024ம் ஆண்டிற்குரிய வரவு செலவு விபரங்களைக் குறிப்பிட்டு, அனுப்பிடாத கிளைகள் அனுப்பிட கேட்டுக் கொண்டதுடன், 2025 டைரி, காலண்டர் அச்சிடுவது குறித்த விபரங்களை குறிப்பிட்டு பேசி, நன்கொடை, வளர்ச்சி நிதி போன்றவைகள் அதிகபடுத்திட கேட்டுக் கொண்டார்.

செயல் தலைவர், அமைப்பு செயலாளர் ஆகியோரது உரைக்குப் பின்னர் செயற்குழு உறுப்பினரின் விவாதத்தினை மூத்த மாநில செயலாளர் தோழர். K. செல்வராஜீ துவக்கிப் பேசி இன்றுள்ள சூழ்நிலையில் தொழில் மற்றும் தொழிலாளர் நலன் பாதுகாக்க தொழிற்சங்க ரீதியாக

நாம் எடுத்திட வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறிப்பாக காலியிடங்களை நிரப்புதலில் ஒப்பந்த தொழிலாளர்கள் மற்றும் பகுதி நேர பணியாளரின் நிரந்தரத்திற்கு முக்கியத்துவம் செலுத்திடும் வகையில் 2025ல் தொழிலாளர்களைத் திரட்டி கோரிக்கைகளை வலியுறுத்திட வேண்டும் என்றும் பொதுக்குழு கூட்டம் சிறப்பாக நடத்திட கிளைகளின் பங்களிப்பை உறுதி செய்திட வேண்டிடவும் கேட்டுக் கொண்டார்.

TNEBREOS மற்றும் TNEB நிர்வாகப் பணியாளர் சங்கம் பொதுச் செயலாளர்களின் உரைக்கு பின்னர் செயற்குழு உறுப்பினர்களின் விவாதத்தின் அடிப்படையில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. மின்சார வாரியத்தின் புதிய தலைவராக பொறுப்பேற்ற பின்னர் உடனடியாக தீபாவளிக்கான போனஸ் மற்றும் அகவிலைப்படி உயர்வு பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்றவர்கள் அனைவருக்கும் நிலுவைத் தொகையுடன் வழங்கியதை இச்செயற்குழு பாராட்டி மின்வாரியத் தலைவர் அவர்கட்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.
2. 01.12.2019 ஊதிய உயர்வு ஒப்பந்தத்தில் 01.12.2019க்கும் 16.05.2023க்கும் இடைப்பட்ட காலத்தில் பணியில் சேர்ந்தவர்களுக்கு 6% ஊதிய உயர்வு சுமார் 10,000 பேருக்கு (வாரிய பணிக்கு வந்தவர்கள் மற்றும் கேங்மேன் பணியாளர்கள்) மறுக்கப்பட்டுள்ளதை வழங்கிட கோரி தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளதை தொடர்ந்து வாரிய கூட்டத்தின் ஒப்புதலுக்கான அளவில் உள்ளது. விரைவில் ஒப்புதல் அளித்து 6% ஊதிய உயர்வினை அளித்திட வேண்டுகிறோம்.
3. காலிப்பணியிடங்கள் குறிப்பாக field Assistant, Technical Assistant, Assistant Engineer, Junior Assistant, Typist, Assesor, Assistant Draughtsmen போன்ற பதவிகளை விரைவாக நிரப்பிட வேண்டுகிறோம்.
4. கேங்மேன் பணியாளர்களை field Assistant பதவிக்கு மாற்றம் செய்திட வேண்டுகிறோம். (சுமார் 20000க்கு மேற்பட்ட field Assistant பதவிகள் காலியாக உள்ளது.)
5. கேங்மேன் பணியாளர்கள் வெளி மாவட்டங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளதால் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகிறார்கள். அடிக்கடி விபத்து நடப்பதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைகிறது. எனவே, ஏற்கனவே 10% ஊர்மாறுதல் செய்துள்ளதை போல மேலும் 20% ஊர் மாறுதல் செய்திட வேண்டுகிறோம்.
6. 07.06.2022 Cut off Dateஐ தளர்த்தி Diplamo, Degeree படித்துள்ள அனைவருக்கும் (Technical Assistant, Assistant Engineer, Junior Assistant) உள்முகத் தேர்வு அனுமதித்திட வேண்டுகிறோம்.
7. பணி வழங்கப்படாமல் உள்ள 5000 கேங்மேன் தேர்வு பெற்றவர்களுக்கு பணி நியமனம் வழங்கிட வேண்டுகிறோம்.
8. ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தப்படுத்திட ரத்து செய்துள்ள ஆக No.9 நாள்.09.01.2008ஐ மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வர வேண்டுகிறோம்.
9. மின் வட்டங்களில் பணியாற்றும் பகுதி நேரப் பணியாளர்கள் பட்டியல் கேட்டு பெற்றுள்ளவர்களுக்கு (க.எண். 001046/G56/G562/216. Dt.09.06.2017) பணி வழங்கிட வேண்டுகிறோம்.
10. பதவி உயர்வுகள்:

i) Junior Assistant (Adm)லிருந்து Assistant (Adm)

ii) Assistant (Adm)லிருந்து Administrative Supervisor

iii) Administrative Supervisorலிருந்து Assistant Administrative Officer
iv) Assessorலிருந்து Inspector of Assesment
v) Inspector of Assesmentலிருந்து Revenue Supervisor
vi) Revenue Supervisorலிருந்து Assesment Officer
vii) Assistant (Accounts)லிருந்து Accounts Supervisor
viii) Accounts Supervisorலிருந்து Assistant Accounts Officer
ix) Senior Draughtsmenலிருந்து Head Draughtsmen
x) Junior Engineer II grade - Diplamo of Non Diplamo

போன்றவைகள் காலதாமதமாகிக் கொண்டே செல்கிறது. மேற்கண்ட பதவி உயர்வுகளை விரைவாக வழங்கிட வேண்டுகிறோம்.

11. குடும்ப நல நிதி 3,00,000லிருந்து 5,00,000 ஆக உயர்த்திட அரசாணை G.O.No.197 நாள். 01.09.2021ஐ வாரியத்திற்கு அனுமதித்து உத்தரவிட வேண்டுகிறோம்.

12. பயணப்பட்டியல் 75% லிருந்து 100% வரை உயர்த்தியுள்ள அரசாணை G.O.218 Dt.13.07.2023ஐ மின்சார வாரியத்திற்கு அனுமதித்து உத்தரவிட வேண்டுகிறோம்.

13. DGRG தொகை 20 லட்சத்திலிருந்து 25 லட்சமாக உயர்த்திய அரசாணை G.O.No.281. நாள்.06.09.2024ஐ மின்சார வாரியத்திற்கு அனுமதித்து உத்தரவிட வேண்டுகிறோம்.

14. பணியாளர்களுக்கு Allowances மாற்றியமைக்க கமிட்டி TANGEDCO Proceedings No.29. Dt.21.06.2023ன்படி பேச்சுவார்த்தை நடத்தி முடிவு காண வேண்டுகிறோம்.

15. 16.05.2023 ஒப்பந்தத்தில் மூன்று மாத காலத்திற்குள் வேலைபளு பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று குறிப்பிட்டுள்ளதை நடைமுறைபடுத்தாமல் உள்ளதால் வேலைபளு குறித்து பேச்சுவார்த்தை நடத்திட வேண்டுகிறோம்.

16. 01.12.2023 முதல் வழங்கிட வேண்டிய ஊதிய உயர்வுக்கான பேச்சுவார்த்தைக்கு உடனடியாக கமிட்டி அமைத்து தொழிற்சங்கங்களோடு பேசிட வேண்டுகிறோம்.

17. ஓய்வு பெற்றவர்களுக்கு ஊதிய உயர்வு நிலுவைத் தொகை இரண்டாவது தவணை வழங்கப்படாமல் உள்ளதை விரைவாக வழங்கிட வேண்டுகிறோம்.

18. Adm Supervisor பதவியில் உள்ளவர்களுக்கு Superintendent and Section officer பதவிக்கு இணையான ஊதியம் வழங்கிட வேண்டுகிறோம்.

19. Chief Head Draughtsmen இல்லாத மின்வட்டங்களுக்கு Chief Head Draughtsmen வழங்கிட வேண்டுகிறோம்.

20. Deputy Secretary பதவி Secretariet Branchல் உள்ளதையும், Senior Personnel Officer பதவி Administrative Branchல் உள்ளதையும் குறைக்காமல் தொடர்ந்து வழங்கிட வேண்டுகிறோம்.

21. தலைமைப் பொறியாளர் (பணியமைப்பு) அலுவலகத்தால் கேங்மேன் பணியாளர்களுக்கு ஊர் மாறுதல் உத்தரவு வழங்கப்பட்டிருந்தும் மின்வட்டங்களில் பணிவிடுப்பு செய்யாமல் காலதாமதப்படுத்தும் மேற்பார்வை பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் அலுவலகங்களுக்கு பொதுவாக தகுந்த உத்தரவிட்டு ஊர் மாறுதல் உத்தரவு பெற்றவர்களை உடனடியாக பணிவிடுவிப்பு செய்திட வேண்டுகிறோம்.

22. TANGEDCOவைப் பிரித்து DISTRIBUTION, GENARATIONand GREEN ENERGY என மூன்று கம்பெனிகளாகப் பிரித்தது போல் எதிர்காலத்தில் DISTRIBUTION CORPORATIONயை பிரித்திட முயற்சிக்கும் செயலை கைவிட வேண்டுகிறோம்.

23. புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்து பழைய பென்ஷன் திட்டத்தை தமிழக அரசு அமல்படுத்திட வேண்டுகிறோம்.

24. கொரோனா காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள surrender leave (ஒப்புவிக்கும் விடுப்பு) பணமாக்குவதை தமிழக அரசு மீண்டும் அனுமதித்து surrender leaveஐ பணமாக்கிடும் பழைய நடைமுறையை அமல்படுத்திட வேண்டுகிறோம்.

25. Smart meter திட்டத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்தில் அமல்படுத்துவதை நிறுத்திட வேண்டுகிறோம்.

26. காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிடாமல் பதவிகளை ஒழிப்பதைக் கைவிட வேண்டுகிறோம்.

27. மின்சார வாரியத்தில் பணியாற்றுபவர்களுக்கு வழங்கப்பட்டு வந்துள்ள Account Test மற்றும் Department Testக்கான ஆண்டுயர்வுகள் (increments) நிறுத்தி வைத்துள்ளதை மீண்டும் வழங்கிட வேண்டுகிறோம்.

28. TNEBEF வேலூர் கிளையின் செயல்பாடுகளை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க கீழ்கண்ட குழு நியமிக்கப்படுகிறது. 15 தினங்களுக்குள் முழு அறிக்கை சமர்ப்பித்திடவேண்டி குழுவின் தலைவரை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

| | |
|---|---|
| தோழர். **R. ஜெயராமன்** | தலைவர் |
| தோழர். **J.L. பாஸ்டின்ராஜ்** | உறுப்பினர் |
| தோழர். **G.K. பாலகிருஷ்ணன்** | உறுப்பினர் |
| தோழர். **A. டேவிட்** | உறுப்பினர் |
| தோழர். **S. கோகுல்தாஸ்** | உறுப்பினர் |

29. இராமநாதபுரம் வழுதூர் எரிவாயு மின் உற்பத்தி நிலையத்தில் பணியாற்றுபவர்களுக்கென தனியாக TNEBEF கிளை உடனடியாக உருவாக்கிட வேண்டுமென இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

30. 2024ம் ஆண்டிற்கான மாநில பொதுக்குழு டிசம்பர் 14, 15 மற்றும் 16 ஆகிய தேதிகளில் திருச்சியில் நடத்திடுவது என தீர்மானிக்கப்பட்டது.

31. பொதுக்குழு பிரதிநிதி கட்டணம் ரூ.500/- நிர்ணயிப்பது எனவும், கிளைகளின் உறுப்பினர் எண்ணிக்கைக்கு ஏற்ப பிரதிநிதிகள் எண்ணிக்கை 7 முதல் 15 வரை அனுமதிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

தலைவரின் முடிவுரைக்கு பின்னர் செயற்குழு இனிதே நிறைவுற்றது.

தோழமையுள்ள

**(அ.சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

# தீபாவளிக்கு அடுத்த நாள் அரசு விடுமுறை - அரசாணை

(சுருக்கம்)

விடுமுறை - தீபாவளி பண்டிகை 31.10.2024 வியாழக்கிழமை அன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு - தீபாவளிக்கு அடுத்த நாள் 01.11.2024 வெள்ளிக்கிழமை அன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை வழங்கி - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பொது (பல்வகை)த் துறை**

**அரசாணை (1டி) எண். 453**

**நாள்: 21.10.2024**
**குரோதி வருடம், ஐப்பசி-4**
**திருவள்ளுவர் ஆண்டு 2055**

**படிக்க:-**

1. அரசாணை (நிலை) எண். 154, பொது(பல்வகை)த் துறை, நாள்: 03.09.2009.
2. அரசுக் கடித எண். 8585/பல்வகை/2013-7, பொது (பல்வகை)த் துறை, நாள்: 21.02.2024
3. பல தரப்பிலிருந்தும் வரப்பெற்ற கோரிக்கைகள்.

★★★

**ஆணை:**

இவ்வாண்டு, 31.10.2024 அன்று தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுவதை முன்னிட்டு, மாணவர்கள், அவர்தம் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் தங்களது சொந்த ஊர்களுக்குச் சென்று விழாவினை மகிழ்வுடன் கொண்டாடி திரும்புவதற்கு ஏதுவாக, 01.11.2024 வெள்ளிக்கிழமை அன்று ஒரு நாள் மட்டும் தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை அளிக்குமாறு பலதரப்பிலிருந்தும் கோரிக்கைகள் அரசுக்கு வரப்பெற்றன.

2. அக்கோரிக்கைகளை, அரசு கவனமுடன் பரிசீலித்து தீபாவளிக்கு அடுத்த நாளான 01.11.2024 வெள்ளிக்கிழமை அன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை அளித்து, அவ்விடுமுறையை ஈடு செய்யும் வகையில் 09.11.2024 (சனிக்கிழமை) அன்று பணிநாளாக அறிவித்து ஆணை வெளியிடப்படுகிறது.

3. மேற்கண்ட உள்ளூர் விடுமுறை தினமானது செலாவணி முறிச்சட்டம் 1881 (Under Negotiable Instruments Act. 1881)-ன் கீழ் அறிவிக்கப்படவில்லை என்பதால், அவசர அலுவல்களை மேற்கொள்ளும் பொருட்டு தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கருவூலங்கள், சார்நிலைக் கருவூலங்கள் குறிப்பிட்ட பணியாளர்களோடு செயல்படுவதற்கு தகுந்த ஏற்பாடுகள் செய்யுமாறு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**(ரீட்டா ஹரிஷ் தக்கர்)**
அரசு செயலாளர்

# தமிழ்நாடு மின்சார வாரியம் எம்ப்ளாயீஸ் பெடரேஷன், தேனி நேரடி பேச்சுவார்த்தை விபரம்

தேனி மேற்பார்வை பொறியாளர் அவர்கள் முன்னணியில் 21.10.2024 அன்று மாலை 4.30 மணி அளவில் நேரடி பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதில் நிர்வாக தரப்பில் செயற்பொறியாளர் / பொது மற்றும் நிர்வாக அலுவலர் / தேனி தொழிற்சங்க சார்பாக தேனி வட்டக்கிளை தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோர்கள் கலந்து கொண்டு கீழ்கண்ட கோரிக்கைகளை பேசி தீர்வு காணப்பட்டது. அவை,

| வ. எண். | கோரிக்கைகள் | நிர்வாகத்தரப்பு நடவடிக்கை விபரம் |
|---|---|---|
| 1. | கருணை அடிப்படையில் வழங்கப்படும் வாரிசு வேலை விண்ணப்பங்களை அந்தந்த மேற்பார்வை பொறியாளர்களே பணி நியமன உத்திரவு வழங்கலாமென த.பொ/பணி/ சென்னை அவர்களின் (Per) CMD TNPDCL Proceedings 17 நாள் 23.09.2024 அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, கீழ்க்கண்ட வாரிசு வேலை விண்ணப்பங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு பணி நியமன உத்தரவு வழங்குவது தொடர்பாக.<br>i) திருமதி. நர்மதா க/பெ. (லேட்) பார்த்திபன் கேங்மேன் ஒடைப்பட்டி இறந்த நாள்: 17.12.2023 விண்ணப்ப நாள்: 03.07.2024.<br>ii) திரு. தருண்குமார், த/பெ (லேட்) பாலமுருகன் கம்பியாளர் கிழக்கு தேனி இறந்த நாள்: 31.10.2023 விண்ணப்ப நாள்: 25.07.2024<br>iii) திருமதி. பிரதிபா, க/பெ. (லேட்) ம. கேசவன் கம்பியாளர் சுருளிபட்டி இறந்த நாள்: 25.10.2023 விண்ணப்ப நாள்: 04.06.2024.<br>iv) திரு. J. நித்தியராஜ், த/பெ. (லேட்) ஜெயச்சந்திரன் வருவாய் மேலாளர் ராஜதானி இறந்த நாள்: 05.01.2023 விண்ணப்ப நாள்: 02.08.2024<br>v) திருமதி. M. காவியா, அ/பெ. (லேட்) விக்னேஷ்வரன் கள உதவியாளர் மின்பாதைகள் பிரிவு இறந்த நாள்: 28.10.2021 விண்ணப்ப நாள்: 2024. | இனி வரும் காலங்களில் நடைமுறைப் படுத்தப்படும். தலைமை பொறியாளர் / பணி / சென்னை அவர்களின் 23.09.2024-ம் தேதி முன்பாக தலைமைப்பொறியாளர் பணி / சென்னைக்கு அனுப்பப்பட்டுள்ள வாரிசு வேலை விண்ணப்பங்களுக்கு பணி நியமனம் வழங்கிய பின்பு மற்ற நான்கு விண்ணப்பங்களுக்கு மேற்பார்வை பொறியாளர் தேனி அவர்களால் நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>திருமதி. நர்மதா க/பெ. (லேட்). பார்த்திபன் கேங்மேன் அவர்களின் வாரிசு வேலை விண்ணப்பத்தின் மீது முன்னுரிமை வழங்கி வாரிசு வேலை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| 2. | காலியாக உள்ள முகவர் முதல் நிலை மற்றும் சிறப்பு நிலை முகவர் ஆகிய பதவிகளை நிரப்பிட தகுதிக்காண் பட்டியல் கேட்பது தொடர்பாக. | சிறப்பு நிலை முகவர் பதவி உயர்வுக்கு தகுதிக்காண் பட்டியல் கேட்கப்பட்டுள்ளது. முகவர் பதவி உயர்வுக்கு தகுதிக்காண் பட்டியல் 10 தினங்களுக்குள் கேட்கப்படும். |
| 3. | இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மின்பகிர்மான வட்டங்களிலிருந்து தேனி மின்பகிர்மான வட்டத்திற்கு விருப்ப மாறுதல் உத்தரவு பெற்றுள்ள கேங்மேன் பணியாளர்களை பணிவிடுப்பு செய்வதற்கான மேல்நடவடிக்கை தொடர்பாக. | முறையாக பணி விடுப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் திரு. கருப்பசாமி கேங்மேன் அவர்களை ஓரிரு தினங்களில் பணி விடுப்பு செய்யப்படும். |
| 4. | திரு. R. செல்வக்குமார், கம்பியாளர் தேவாரம் துணை மின்நிலையம் அவர்கள் விருப்ப மாறுதல் விண்ணப்பத்தின் பேரில் மாறுதல் உத்தரவு வழங்குவது தொடர்பாக. | இந்த மாதம் இறுதிக்குள் ஒழுங்கு நடவடிக்கை குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்படும். |
| 5. | திரு. K. ரவிச்சந்திரன் மின்பாதை ஆய்வாளர் மயிலாடும்பாறை, பெரியகுளம் கோட்டம் அவர்கள் 400 கி.வோ துணை மின்நிலையம் தப்புக்குண்டுக்கு மாறுதல் உத்தரவு வழங்குவது தொடர்பாக. | டிசம்பர் 2024-க்குள் விருப்ப மாறுதல் உத்தரவு வழங்கப்படும். |
| 6. | திரு. M. முத்துச்சாமி மின்பாதை ஆய்வாளர் 400 கி.வோ. துணை மின்நிலையம், அவர்கள் பெரியகுளம் கோட்டத்திற்கு விருப்ப மாறுதல் உத்தரவு வழங்குவது தொடர்பாக. | |
| 7. | ஓர் ஆண்டு காலத்திற்கும் மேலாக பெரியகுளம் கோட்டத்திற்கு விருப்ப மாறுதல் உத்தரவு பெற்றுள்ள திரு. பா. ராஜா கம்பியாளர் சிறப்பு பராமரிப்பு பிரிவு அவர்களை பணிவிடுப்பு செய்வது தொடர்பாக. | 15.11.2024-க்குள் பணி விடுப்பு செய்யப்படும். |
| 8. | பெரியகுளம் 110/22 கி.வோ. துணை மின் நிலையத்தின் Yard விசஜந்துக்கள் அதிகமாக காணப்படுவதால் அங்கு பணியாற்றும் பணியாளர்களுக்கு உயிர்பாதுகாப்பு அளிக்கும்விதமாக Yard-யினை பராமரிப்பு பணி செய்திட நடவடிக்கை எடுப்பது தொடர்பாக. | மழை காலம் முடிந்தவுடன் அனைத்து துணை மின்நிலையங்கள் சுத்தம் செய்யப்படும். அனைத்து செயற்பொறியாளர்களுக்கும் அறிவுரை வழங்கப்படும். |

| | | |
|---|---|---|
| 9. | திரு. L. கதிரேசன் இளமின் பொறியாளர் காமயகவுண்டன்பட்டி அவர்களின் விருப்ப மாறுதல் விண்ணப்பத்தின் பேரில் மாறுதல் உத்தரவு வழங்குவது தொடர்பாக. | மாறுதல் உத்தரவு விரைவில் வழங்கப்படும். |
| 10. | துணை மின்நிலையங்கள் மற்றும் பிரிவு அலுவலகங்களில் காலியாக உள்ள பகுதி நேர பணியாளர்களை அமர்த்துவது தொடர்பாக (Per) CMD TANGEDCO (Adm.Br) Proceedings No. 76 நாள்: 09.11.2020படி Tender விடுவது தொடர்பாக. | பகுதி நேரம் பணியாளர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 11. | மூன்று ஆண்டுகளுக்கு மேலே ஒரே இருக்கையில் உள்ள நிர்வாகப் பிரிவு மற்றும் கணக்குப் பிரிவில் பணியாற்றும் பணியாளர்களை வேறு இருக்கைக்கு மாற்றுவது தொடர்பாக 28.06.2024 நடைபெற்ற பேச்சுவார்த்தையில் பேசப்பட்டு, நிர்வாகமும் ஏற்றுக் கொண்ட நிலையில் இது நாள் வரை இருக்கைகள் மாற்றப்படவில்லை, விரைவில் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக. | பரிசீலிக்கப்படும் |
| 12. | திரு. R. கண்ணன் முகவர் மீது மற்றும் நிஷாந்த்குமார் கேங்மேன் ஆகியோர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு விசாரணை முடிந்து ஒரு வருட காலத்திற்கும் மேலாக காலம் கடந்தும் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாக. | செயற்பொறியாளர் / சின்னமனூர் பகிர்மானம் அவர்களுக்கு தக்க அறிவுரை வழங்கப்படும். |

தொகுப்பு : **இரா. மூக்கையா**
மாநில / வட்டக்கிளை செயலாளர்
தேனி

# கணக்கீட்டாளர் - இளநிலை உதவியாளர் - பதவி மாற்றம் - உத்தரவு

நிர்வாகக் கிளை
என்.பி.கே.ஆர்.ஆர். மாளிகை,
எண். 144, அண்ணாசாலை,
சென்னை - 600 002.

**குறிப்பாணை எண். 032324/ஜி521/2024, நாள்: 22.10.2024**

**பொருள் :** நிர்வாகம் - மூன்றாம் பணிநிலை கணக்கீட்டாளர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளர் (நிர்வாகம்) பதவி மாற்றம் - அறிவுறுத்தல் வழங்கப்படுவது - தொடர்பாக.

**பார்வை :** 1) (Per) B.P. No. 110, CMD TANCEDCO (Adm. Branch), dated 03.11.2018. (In Tamil)
2) B.P. (Per) (CMD) TANGEDCO Proceedings No. 72, Dated : 23.11.2021.

*****

பார்வை (1)-ல் காணும் வாரிய செயல்முறை ஆணையில் 40 வயதினை பூர்த்தி செய்தும் மற்றும் பட்டப்படிப்பு 10, +2, மற்றும் பட்டப்படிப்பு முறையில்) படித்த பெண் கணக்கீட்டாளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி கணக்கீட்டாளர்களுக்கு ஒரே ஒரு முறை மட்டும் பணி மாற்றம் செய்து கணக்கீட்டாளர் பதவிக்கு இணையான பதவியான இளநிலை உதவியாளர் (நிர்வாகம் (அ) கணக்கு) வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) மேலும் நேர்முகத் தேர்வு/வாரிசு வேலை அடிப்படையில் பணியில் சேர்ந்த பணியாளர்கள் விருப்ப மாறுதல் அளிக்கும் பட்சத்தில், மேற்கண்ட பணியாளர்கள் குறைந்தபட்சம் 2 வருடங்கள் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என பார்வை (2)-ல் காணும் வாரிய செயல்முறை ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) நேர்முகத் தேர்வு/வாரிசு வேலை அடிப்படையில் வாரியத்தில் பெண் கணக்கீட்டாளராக பணியில் சேர்ந்த பணியாளர்கள் 40 வயது பூர்த்தியடையாத நிலையிலும் மற்றும் ஒரு வருட காலம் பூர்த்தியடையாத நிலையில் கருணை அடிப்படையில் பெண் கணக்கீட்டாளராக வாரியத்தில் பணியமர்த்தப்பட்டுள்ள பல நபர்களும் இளநிலை உதவியாளர் (நிர்வாகம்) பதவி மாற்றம் கோரும் நிலை உருவாகி உள்ளதால் வாரிய செயல்முறை ஆணை எண். 110, நாள்: 3.11.18-ன் படி ஏற்றத்தக்கதல்ல. மேற்கண்ட ஆணைகளின்படி இனி வருங்காலங்களில் வாரியத்தில் ஈர்ப்பு செய்யப்படும் பணியாளர்கள் 40 வயது முடிந்தும் மற்றும் இரண்டு வருடங்கள் பூர்த்தி செய்யப்பட்ட கணக்கீட்டாளர்களுக்கு இளநிலை உதவியாளர் (நிர்வாகம்) பதவி மாற்றம் கோரப்படும் கருத்துருக்களை மட்டும் இவ்வலுவலகத்திற்கு அனுப்பும்படி இதன் மூலம் வலியுறுத்தப்படுகிறது.

4) இனி வரும் காலங்களில் மேற்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யாத கணக்கீட்டாளரின் கருத்துருக்களை மேல்நடவடிக்கைக்கு அனுப்புவதினை தவிர்க்கும்படி அறிவுறுத்தப்படுகிறது.

**ரா. சுனில்**
தலைமைப்பொறியாளர்/பணியமைப்பு

# 2024 - தீபாவளி பண்டிகை மின்வாரியத்திற்கு விடுப்பு

**Tamil Nadu Power Distribution Corporation Limited**

**(ABSTRACT)**

Holiday - Local Holiday on succeeding day of Deepavali on 01.11.2024 (Friday) Inconnection with Deepavali Festival for all District in Tamil Nadu - Adoption in TNPDCL, TNPGCL, TNGECL & TANTRANSCO - Orders - Issued.

---

**(Secretariat Branch)**

**(Rt.) CMD TNPDCL Proceedings No. 11** **Dated 24.10.2024**
Krodhi - Iyppasi-7
Thiruvalluvar Aandu - 2055.

**READ:-**

G.O. (1D) No. 453, Public (Miscellaneous) Department, dated 21.10.2024.

**PROCEEDINGS:**

In pursuance of orders issued by Government read above, it is hereby ordered that 01st November 2024, (Friday) the succeeding day of Deepavali Festival shall be a local holiday for all the Offices of TNPDCL, TNPGCL, TNGECL & TANTRANSCO in connection with "Deepavali festival". These offices will function on 09.11.2024 (Second Saturday) of November in order to compensate on the above holiday.

2. However, all the essential services and Distribution network of the entire said corporation will function on 01.11.2024 (Friday) with necessary minimum staff required to run these units.

**(BY ORDER OF THE CHAIRMAN-CUM-MANAGING DIRECTOR)**

**R. Devaraj**
**Secretary**

## ✉ பெடரேஷன் கடிதங்கள்

பெறுநர்: நாள் : 21.10.2024

**தலைவர்,**
TNEB Ltd
144, அண்ணாசாலை, சென்னை-2.

ஐயா,

**பொருள்** : **அகவிலைப்படி உயர்வு 50%லிருந்து 53% - அரசாணை - வாரிய உத்தரவு - கோருதல் - தொடர்பாக.**

**பார்வை** : **அரசாணை (நிலை) எண். 317 நாள்: 18.10.2024**
**அரசாணை (நிலை) எண். 319 நாள்: 18.10.2024.**

பார்வையில் கண்டுள்ள அரசாணைகளின்படி தமிழ்நாடு அரசு பணியாளர்களுக்கும் ஓய்வு பெற்றவர்களும் 01.07.2024 முதல் 50%லிருந்து 53% மாக உயர்த்தி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணைகளைப் பின்பற்றி TNEB Ltd, ன் கீழ் இயங்கும் TNPDCL, TANTRANSCO, TNPGCL, TNGECL ஆகிய நிறுவனங்களில் பணியாற்றுபவர்களுக்கும், ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெற்று வருபவர்களுக்கும் விரைவாக உத்தரவிட்டு வழங்கிட வேண்டுகிறோம்.

தீபாவளி பண்டிகை 31.10.2024ல் கொண்டாடப்பட உள்ளதால் அனைவரின் தேவையும் நிறைவேற்றும் வகையில் உரிய நேரத்தில் பணம் பட்டுவாடா செய்திட வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள,
**(அ. சேக்கிழார்)** பொதுச்செயலாளர்

★★★

பெறுநர்: நாள் : 06.11.2024

**தலைமைப் பொறியாளர் (பணியமைப்பு)**
தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை-600 002.

ஐயா,

**பொருள் : திரு. சி. பூமிநாதன் - தஞ்சாவூர் - ஒப்பந்த தொழிலாளர் - நீதிமன்ற உத்தரவு - பணி நிரந்தரம் கோருதல் - தொடர்பாக.**

**பார்வை : சென்னை உயர்நீதிமன்றம் - WP 26322/2004.**

திரு. சி. பூமிநாதன் ஒப்பந்த தொழிலாளராக (முன்னர் கும்பகோணம் கிராமிய கூட்டுறவு சங்கம்) தஞ்சாவூர் மின்வட்டத்தில் பணியாற்றி வந்ததாகவும், 480 நாட்கள் நிறைவடையாததால் பணி நிரந்தரம் செய்யாததை எதிர்த்து கடலூர் தொழிலாளர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததின்படி தொடர்ச்சியாக பணி வழங்கிட உத்தரவிட்டுள்ளதாகவும், பின்னர் 2004ல் சென்னை உயர்நீதிமன்றம் பார்வையில் கண்டுள்ள வழக்கின் தீர்ப்பின்படி பணி வழங்கிட ஆணையிட்டுள்ளதாகவும், மேலும் நிர்வாகத் தரப்பில் சீராய்வு மனு விண்ணப்பிக்காமல் தனக்கு பணி வழங்கிட வேண்டுமென விண்ணப்பித்துள்ளார்.

தலைமைப் பொறியாளர் (பணியமைப்பு) அவர்கள் மேற்கண்ட விண்ணப்பத்தினை பரிசீலித்து நீதிமன்ற உத்தரவினை அமல்படுத்தி பணி வழங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள
**(அ. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

★★★

## TNEB நிர்வாகப் பணியாளர்கள் மற்றும் அலுவலர் சங்க கடிதம்

பெறுநர்: நாள் : 04.10.2024

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்** அவர்கள்,
தமிழ்நாடு மின்பகிர்மானக் கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை-600 002.

ஐயா,

**பொருள் : நிர்வாகம் - மாநில பணியாளர்கள் - நிர்வாகப்பிரிவு பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் பதவி உயர்வு - தேக்கமடைந்துள்ளது - பதவி உயர்வு வழங்க வேண்டுதல் - தொடர்பாக.**

கீழ்க்கண்ட நிர்வாகப் பிரிவு பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் பதவி உயர்வுகள் நீண்ட காலமாக வழங்கப்படாமல் தேக்கமடைந்துள்ளதனை பரிசீலனை செய்து விரைவில் பதவி உயர்வு வழங்கிட கேட்டுக் கொள்கிறோம்.

1. இளநிலை உதவியாளர் (நிர்வாகம்) / தட்டச்சர் பதவியிலிருந்து உதவியாளர் பதவி உயர்வு வழங்க கடந்த 2.9.2023-ல் தகுதியறிக்கை கோரப்பட்டு ஓராண்டுக்கு மேலாக நிலுவையில் உள்ளது.
2. உதவியாளர் (நிர்வாகம்) பதவியிலிருந்து நிர்வாக மேற்பார்வையாளர் பதவி உயர்வுக்கு கடந்த 20.6.2024-ல் தகுதியறிக்கை கோரப்பட்டு பதவி உயர்வு வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது.
3. நிர்வாக மேற்பார்வையாளர் பதவியிலிருந்து உதவி நிர்வாக அலுவலர் பதவிக்கு பதவி உயர்வு வழங்க 3.2.2024-ல் தகுதியறிக்கை கோரப்பட்டு சுமார் எட்டு மாதங்களுக்கு மேலாக பதவி உயர்வுகள் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது.
4. உதவி நிர்வாக அலுவலர் பதவியிலிருந்து நிர்வாக அலுவலர் பதவிக்கு 23.08.2024-ல் தகுதி அறிக்கை கோரப்பட்டுள்ளது. அதிலும் வாரிய ஆணை B.P.Ms(ch) No. 212 (SB) Dt. 12.06.1987-ன்படி முழுமையான காலியிடங்கள் மற்றும் எதிர்காலத்தில் ஏற்படும் பணி ஓய்வு காலியிடங்களை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. குறைவான எண்ணிக்கையிலேயே தகுதியறிக்கை கோரப்பட்டுள்ளது. அந்த பதவி உயர்வும் நிலுவையில் உள்ளது.
5. நிர்வாக அலுவலர் பதவியில் இருந்து முதுநிலை நிர்வாக அலுவலர் பதவிக்கு தற்போது மூன்று காலியிடங்கள் இருந்தும் ஒரு காலியிடத்திற்கு மட்டுமே தகுதியறிக்கை கோரப்பட்டுள்ளது. மேற்கண்ட காலியிடங்கள் 3/2024, 4/2024 மற்றும் 6/2024-ல் ஏற்பட்ட காலியிடங்களாகும். அப்போது தகுதி பட்டியல் (பேனல்) நிலுவையில் இருந்தும் நாடாளுமன்ற தேர்தல் காரணமாக ஒரு நிர்வாக அலுவலர் பதவி உயர்வு பெறாமலேயே 31.05.2024-ல் பணி ஓய்வு பெற்றுவிட்டார். அடுத்ததாக தகுதி பட்டியல் (பேனல்) முடிவடைந்த நிலுவையில் மேற்கண்ட பதவி உயர்வும் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது.

எனவே, அய்யா அவர்கள் நிர்வாகப் பிரிவிற்கு இளநிலை உதவியாளர் முதல் முதுநிலை நிர்வாக அலுவலர் வரை எந்த ஒரு பதவிக்கும் பேனல் தயார் செய்து பதவி உயர்வு வழங்கப்படாமல் உள்ளதை பரிசீலனை செய்து பதவி உயர்வுகள் வழங்கிட வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி வணக்கம்!

தங்கள் உண்மையுள்ள
**(தி. ஈஸ்வரன்)**
பொதுச்செயலாளர்

★★★

## TNEBREOS கடிதம்

பெறுநர்:

நாள் : 04.10.2024

**திரு. S. டில்லிராஜ் B.Com.,**
இணைச்செயலாளர்/பணியமைப்பு,
செயலக பிரிவு, N.P.K.R.R. மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை-600 002.

ஐயா,

**பொருள் : ஓய்வூதிய சங்க மாநில நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் விபரம் அனுப்புவது தொடர்பாக.**
**பார்வை : 1. Lr. No. 26568/A/17/A172/2024-1 dated : 14.08.2024**
**2. Lr.No. 26568/A17/A172/2024-2 dated : 18.09.2024.**

பார்வையில் கண்ட கடிதத்தின்படி மாநில மாவட்ட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் விபரம் கோரப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் விபரம் எங்களது அனைத்து கிளை நிர்வாகிகளிடம் இருந்து பெறப்பட்டு தங்களின் மேலான பார்வைக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். மாநில நிர்வாகிகள் விவரப் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள
**(P. சுடலை)**
பொதுச்செயலாளர்/TNEBREOS

**தமிழ்நாடு மின்வாரிய ஓய்வுபெற்ற தொழிலாளர் மற்றும் அலுவலர் சங்கம்**
**பதிவு எண். 31/2023, சென்னை**
**இணைப்பு : TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் பதிவு எண். 3600/சென்னை**
**மாநில நிர்வாகிகள் விபரம்**

| வ.எண் | மாநில நிர்வாகிகள் பெயர் | தொலைபேசி எண் | முகவரி |
|---|---|---|---|
| 1. | மாநிலத் தலைவர்<br>**A. அருணாசலம்** | 98415 03371 | 19/1, சுப்பாநாயுடு தெரு,<br>சூளை, சென்னை-600 112 |
| 2. | பொதுச்செயலாளர் | 86376 87223 | 27, சொர்ணா இல்லம், பாரதிநகர் 2வது தெரு,<br>கோவில்பட்டி - 628501<br>email:psudalai77@gmail.com |
| 3. | பொருளாளர்<br>**K. சிவசுப்புபாண்டியன்** | 90801 32876 | கல்யாணி பவனம், பிளாட் எண். 21, தாய்நகர்,<br>மேலப்பாளையம், திருநெல்வேலி -627005 |
| 4. | செயல் தலைவர் | 94437 50969 | 1273, ஹவுசிங் யூனிட், சிங்காநல்லூர்,<br>கோயம்புத்தூர்-641005 |
| 5. | அமைப்பு செயலாளர்<br>**S. மெய்ஞானம்** | 94421 54404 | 34, TNHB, காலனி, கந்தம்பட்டி மேற்கு,<br>சேலம் மாவட்டம்-636005 |
| | **மாநில துணை தலைவர்கள்** | | |
| 6. | **N. முத்தையா** | 94422 53190 | 40/5, இ.பி. காலனி 1வது தெரு,<br>தியாகராஜா நகர், மகாராஜா நகர் அஞ்சல்,<br>திருநெல்வேலி - 627011 |
| 7. | **R. மூக்கையா** | 94862 10186 | 36, மிரண்டா 2வது தெரு,<br>ஜெனரல் மருத்துவமனை எதிரில்,<br>சங்குப்பிள்ளை தெரு, தேனி - 625531 |

| வ.எண் | மாநில நிர்வாகிகள் பெயர் | தொலைபேசி எண் | முகவரி |
|---|---|---|---|
| 8. | **S. தங்கதுரை** | 94429 55062 | எழிலகம், மேலமெய்ஞானபுரம்,<br>குணராமநல்லூர் அஞ்சல்,<br>தென்காசி மாவட்டம் - 627814 |
| 9. | **P.S. ராஜ்** | 91760 99977 | 337/21, பேப்பர் மில் ரோடு,<br>சர்ச் வியூ அப்பார்ட்மெண்ட்,<br>பெரம்பூர், சென்னை- 600 011 |
| 10. | **A. தனசேகரன்** | 94425 61930 | 28/11, காத்தாயி அம்மன் கோவில் தெரு,<br>மூங்கில் தோட்டம், மணப்பந்தல் அஞ்சல்,<br>மயிலாடுதுறை தாலுகா - 609 305 |
| 11. | **S. சுப்பையன்** | 98434 15153 | 2/314, பாண்டி மெயின் ரோடு, வேப்பஞ்சேரி<br>அஞ்சல், திருத்துறைப்பூண்டி தாலுகா,<br>திருவாரூர் மாவட்டம் - 614703 |
| 12. | **G. முருகானந்தம்** | 95978 22122 | 13/6, ராஜீவ் நகர் முதல் தெரு,<br>சாமுண்டிபுரம் தெற்கு,<br>காந்தி நகர், திருப்பூர் - 641603 |
| 13. | **T. மோகன்தாஸ்** | 94428 87562 | 493, பிள்ளையார் கோவில் தெரு,<br>திளைலாம்பூர் அஞ்சல், வலங்கைமான் (வழி)<br>கும்பகோணம் தாலுகா - 712804 |
| 14. | **C.K. சுப்பிரமணியன்** | 94434 78909 | 9/40, இ.பி. காலனி, எடையார்பாளையம்,<br>குனியமுத்தூர் அஞ்சல், கோயம்புத்தூர்-641108 |
| | **துணை பொதுச்செயலாளர்கள்** | | |
| 15. | **K. செல்வராஜு** | 94435 26608 | 1/56, நாகூர்சாலை, காங்களாஞ்சேரி,<br>திருவாரூர் வழி, நாகப்பட்டினம்-610101 |
| 16. | **S. பார்த்தசாரதி** | 86678 87493 | 19/1F, பிராமின் தெரு, கொரட்டூர்,<br>சென்னை - 600 080 |
| 17. | **R. சக்திவேல்** | 99427 41388 | 30/1, P.R.K. நகர், இருகூர் அஞ்சல்,<br>கோயம்புத்தூர் - 641103 |
| 18. | **M. கோபால்** | 99627 79600 | ப.எண். 60, பு.எண். 70, TVK 2வது லிங்க் சாலை,<br>திருவள்ளுவர் நகர், எருக்கஞ்சேரி,<br>சென்னை-600118 |
| | **மாநில செயலாளர்கள்** | | |
| 19. | **B. வீரமணி** | 98652 77892 | 62B, அண்ணாநகர் ஹவுசிங் யூனிட்,<br>கோயம்புத்தூர் வடக்கு, எடையார்பாளையம்,<br>கோயம்புத்தூர் - 641025 |

| வ.எண் | மாநில நிர்வாகிகள் பெயர் | தொலைபேசி எண் | முகவரி |
|---|---|---|---|
| 20. | **S. ராஜாங்கம்** | 98439 14177 | 11அ, பசுமடம் கிழக்கு லேன், செல்லூர், மதுரை - 625002 |
| 21. | **K.R. சுப்ரமணியன்** | 87782 23892 | 28/24, கருப்பண்ண தேவர் சந்து, ஆவணி மூலவீதி, பழனி - 624 601 |
| 22. | **R. செல்வராஜ்** | 91766 43607 | 1, ராமநாதன் தெரு, அயனாவரம், சென்னை - 600 023 |
| 23. | **N. பக்கிரிசாமி** | 95430 19875 | 97, மேலத்தெரு, நாங்குடி, நாகப்பட்டினம் மாவட்டம்-611104 |
| 24. | **T. நஞ்சுண்டராவ்** | 94431 26980 | 170, கோகலே தெரு, திருவேங்கடபுரம், பொன்னேரி - 601204 |
| 25. | **N. சுந்தரராஜன்** | 99441 93899 | 14, RVE நகர் தெற்கு, காங்கேயம் சாலை, திருப்பூர் - 641604 |
| | **மாநில இணைச் செயலாளர்கள்** | | |
| 26. | **M.C. பரணிகுமார்** | 99520 28670 | 150D, திருவள்ளுவர் தெரு, கிழக்கு தாம்பரம், சென்னை - 600 059 |
| 27. | **N. கிருஷ்ணமூர்த்தி** | 94425 40450 | 63, பெருமாள் வடக்கு கார் தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 627002 |
| 28. | **U. தங்கவேல்** | 77081 99568 | 3/314, இந்திரா நகர், யூனியன் ஆபிஸ் எதிரில், புதுக்கோட்டை, தூத்துக்குடி மாவட்டம்-628103 |
| 29. | **G. பாலசுப்பிரமணியன்** | 98422 27066 | 112/39, தாம்பபிள்ளை தெரு, ராஜபாளையம், விருதுநகர் மாவட்டம்-626117 |
| 30. | **V. வைரப்பன்** | 86758 97867 | 4/129, கலைநகர், தென்பாலம், வேதாரண்யம் அஞ்சல், நாகப்பட்டினம் - 614810 |
| 31. | **K. தயாநிதி** | 99520 02901 | 5, மருதுபாண்டியன் தெரு, காயத்திரி நகர், ஊரப்பாக்கம், காஞ்சிபுரம், செங்கல்பட்டு-603211 |
| 32. | **S. ஆறுமுகம்** | 94420 54660 | 5/200, சண்முக சிகாமணிநகர், கோவில்பட்டி - 628501 |

# ரேஷன் கடைப் பணியாளர் கோரிக்கைகளுக்காக UTUC கடிதம்

பெறுநர்: நாள் : 09.10.2024

**செயலாளர்,**
கூட்டுறவு உணவு நுகர்வோர் பாதுகாப்புத்துறை,
தமிழ்நாடு அரசு தலைமைச்செயலகம்,
சென்னை-600 009.

ஐயா,

**பொருள் : தமிழ்நாடு அரசு ரேசன் கடை பணியாளர்கள் சங்கம் - (Affliated with UTUC) கோரிக்கைகள் - பேச்சுவார்த்தைக்கு நேரம் ஒதுக்கிட வேண்டுதல் - தொடர்பாக.**

தமிழ்நாடு அரசு ரேசன் கடைகளில் பணியாற்றி வரும் தொழிலாளர்களுக்குரிய கோரிக்கைகள் நீண்ட நாட்களாக தீர்க்கப்படாமல் உள்ளதை தங்களின் மேலான கவனத்திற்கு உரிய மேல் நடவடிக்கை மற்றும் தீர்வுக்காக UTUCயுடன் இணைந்துள்ள (Affliated) தமிழ்நாடு அரசு ரேசன் கடைப் பணியாளர்கள் சங்கம் தொடர்ந்து முன் எடுக்கும் கோரிக்கைகளை கொண்டு வருகிறோம்.

- கடந்த 22.02.2021க்குப் பிறகு இன்று வரை சுமார் $3^1/_2$ வருடங்கள் கடந்துள்ள நிலையில் ஊதிய உயர்வு அளிக்கப்படாமல் உள்ளது. குறிப்பாக 15 வருடங்களுக்கு மேலாக பணிபுரிந்து வரும் தொழிலாளர்கள் ரூ. 20,000 அளவில் கூட ஊதியம் பெற முடியாத நிலை உள்ளதைக் கணக்கில் கொண்டு இம்முறை 20% ஊதிய உயர்வு அளித்திட வேண்டுகிறோம்.
- அரசின் சிறப்பு திட்டங்களை அமல்படுத்தும்போது குடும்ப அட்டை ஒன்றுக்கு 50 பைசா வீதம் வழங்கப்படுவதை ரூ. 5/- ஆக உயர்த்தி வழங்கிடல் வேண்டும்.
- தொழிலாளர்களின் ஊதியத்தில் பிரதி மாதம் பிடித்தம் செய்யப்படும் வருங்கால வைப்பு நிதித் தொகையினை கணக்கு சீட்டினை தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கொருமுறை வழங்கிடல் வேண்டும்.
- இலாபத்தில் தொடர்ந்து இயங்கக் கூடிய சங்கங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வந்த 20% போனஸை 10% குறைத்துள்ளதை மாற்றி மீண்டும் இலாப, நட்டம் பார்க்காமல் அனைத்து சங்கங்களிலும் பணியாற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் 20% போனஸ் வழங்கிட வேண்டும்.
- நியாய விலைக்கடைகளுக்கு தனித்துறை உருவாக்கிட வேண்டும் (2022 தேர்தல் வாக்குறுதி எண். 236)
- குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு பணி ஓய்வு காலம் வரை நடவடிக்கையை முடிவு செய்திடாமல் இருப்பதால் பணியாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதால் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் விசாரணையை முடித்து உத்தரவிட வேண்டும்.
- பெண்கள் பணியாற்றும் ரேசன் கடைகள் உட்பட அனைத்து ரேசன் கடைகளிலும் கழிவறை வசதிகள் செய்து தந்திட வேண்டும்.
- பெண் பணியாளர்கள் பணியாற்றுமிடங்களில் வேலை நேரம் ஒரு மணி நேரம் குறைத்து முன்னதாக வீடு செல்ல அனுமதிக்க வேண்டும்.
- 1000 குடும்ப அட்டைகளுக்கு மேலுள்ள கடைகளுக்கு ஒரு கட்டுனர் நியமித்திட வேண்டும்.
- ரேசன் கடைகளுக்கு அனுப்பப்படும் அரிசி, சர்க்கரை, கோதுமை, பாமாயில் மற்றும் மண்ணெண்ணெய் போன்றவைகள் எடையும் அளவும் குறைவின்றி அனுப்பிட கண்காணிப்பு வசதிகள் செய்திட வேண்டும்.

- பணி ஓய்வு பெற்றவர்களுக்கு பணப் பயன்கள் உடனடியாக அளித்திடல் வேண்டும்.
- மகளிர் அமைப்புகள் நடத்திடும் ரேசன் கடைகளின் அமைப்பின் தகுதிக்கேற்ற ஊதியமும், பணி பாதுகாப்பும் வழங்கிட வேண்டும்.
- பணி வரன்முறைப்படுத்தாத இயற்கை எய்திய பணியாளர்கள் மற்றும் கொரோனா காலத்தில் இயற்கை எய்திய பணியாளர்களின் குடும்பங்களின் வாரிசு பணி வழங்கிட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகள் குறித்து தமிழ்நாடு ரேசன் கடை பணியாளர் சங்க நிர்வாகிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட செயலாளர், கூட்டுறவு உணவு நுகர்வோர் பாதுகாப்புத் துறை அவர்கள் தகுந்த நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள
**(அ. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு UTUC

## மின்சார வாரியமும் நாமும் - தொழிலாளி

**த**மிழ்நாடு மின்பகிர்மானக் கழகத்தில் காலியாக உள்ள களஉதவியாளர் பணியிடங்களில் பணியாற்றி வரும் கேங்மேன் பணியாளர்கள் பணிநிலையும், உயிரும் உத்தரவாதமில்லாத நிலை நிலவுவதை இதற்கு மேல் மின்வாரியமும் அரசும் கண்டு கொள்ளாமல் செல்வது நல்லதல்ல.

மின்சார வாரியத்தில் மின்வட்டங்களில் 50%க்கு மேல் களப்பணி காலியிடங்கள் உள்ள மின்வட்டங்களில் கேங்மேன்கள் பணிக்கமர்த்தப்பட்டார்கள். குறிப்பாக தமிழ்நாடு மின்சார வாரியத்தில் சுமார் 10ற்கு மேற்பட்ட மின்வட்டங்களில் பணியமர்த்தப்படவில்லை. அப்படியானால் 4ல் ஒரு பகுதிதான் 50% களப்பணியாளர்கள் உள்ளார்கள் என்பது கணக்கீடாக அமைந்திருக்கிறது.

பணியமர்த்தப்பட்ட 10000 கேங்மேன் பணியாளர்களில் கோவையில் மட்டும் 2000 பேர் பணியமர்த்தப்பட்டனர். 2000 பேரில் 100% வெளிமாவட்டங்களிலிருந்து பணிக்கு வந்தவர்கள், சொந்த ஊருக்கு திரும்ப செல்ல வேண்டுமென பணியமர்த்திய ஆரம்ப காலம் முதற்கொண்டு நாம் வலுவாக வலியுறுத்தி வருகிறோம்.

பலமுறை நாம் எடுத்த முயற்சி போராட்டம் பேச்சுவார்த்தை என படிப்படியாக சிறு சிறு முன்னேற்றத்தைத் தந்தது. அதன்படி வட்டத்திற்குள் ஊர்மாறுதல், பின்னர் வட்டம் விட்டு வட்டம் 10%, மருத்துவ காரணங்களுக்காக ஊர் மாறுதல் என குறிப்பிட்ட சதவிகிதத்தினருக்கு தற்காலிகமாக நிவாரணம் கிடைத்திருக்கிறது. மீதமுள்ளவர்கள் நிலை கேள்விக்குறியாகியுள்ளது. கம்பம் நடவும், குழிதோண்டவும், கம்பி இழுக்கவும்தான் இந்த பணியாளர்கள் என வாரியம் சத்தியபிரமாணம் செய்திருந்தாலும் களப்பணியில் உள்ள காலியிடங்களில் பணி செய்ய உத்தரவிடுதல், நிர்பந்தித்தல் என தொடர்கதையாக சென்று கொண்டிருக்கிறது.

குறிப்பாக விபத்தும் இறப்பும், நூற்றுக்கு மேல் சென்றிருக்கிறது என்ற அபாயக்குரலை பல முறை ஓங்கி ஒலித்தும் வாரியத்தின் கவனம் திரும்பவில்லை.

10% ஊர் மாறுதல் வழங்குவது போல் 3 மாதத்திற்கு அல்லது 6 மாதத்திற்கு ஒருமுறை மேலும் 10% ஊர் மாறுதல் அளித்திட்டால் பணியாளர்கள் சொந்த மாவட்டத்தில் பணி செய்ய வாய்ப்பாக அமையும், விபத்து குறையும், உயிரிழப்பு குறையும்.

களப்பணியில் உள்ள காலியிடங்களில் களஉதவியாளராக (Field Assistant) பதவி மாற்றம் செய்து பணியமர்த்தப்பட்டால் வாரியத்திற்கும் பலன் உண்டு, மக்களுக்கும் சேவை கிடைக்கும்.

கல்வித்தகுதி உள்ளவர்கள் உள்முகத் தேர்வு மூலம் வாய்ப்பளித்தால் Diploma, Degree படித்தவர்கள் அடுத்தகட்ட பணிக்கு செல்வதால் வாரியத்திற்கு நல்ல பணியை பெற முடியும்.

10.08.2007 ஒப்பந்தத்தில் பணிநிரந்தரம் செய்த ஒப்பந்த தொழிலாளர்கள் மஸ்தூர் IIம் நிலை பணியாளர்கள் களஉதவியாளர்களாக மாற்றம் செய்திருக்கிறோம் என்ற வாரியத்தின் வரலாற்றை திரும்பி பார்த்திட்டால் 10000 கேங்மேன் பணியாளர்களையும் களஉதவியாளர்களாக மாற்றிவிட முடியும்.

கேங்மேன் பணியாளர்களின் தேவையான ஊர்மாறுதல் மற்றும் களஉதவியாளர் பெயர் மாற்றம் என்ற இரண்டையும் விரைவாக செய்திட்டால் வாரியத்தின் வருவாயைப்பெருக்குவதற்கு இளைஞர்களின் மகத்தான பணியான சேவையினை மின்பகிர்மான கழகம் பெற்றிட முடியும்.

**நிர்வாகப் பிரிவில் பதவி உயர்வு தேக்கம்!**

இளநிலை உதவியாளர் பதவிக்கு தமிழ்நாடு அரசு 10ம் வகுப்பு கல்வித் தகுதியை நிர்ணயித்திருக்கும் நிலையில் மின்சார வாரியத்தில் இளநிலைபட்டம் பெற்றிருக்க வேண்டும் என்ற நிலை உத்தரவாகி நெடுங்காலமாகிவிட்டது. குறிப்பாக பட்டபடிப்பு தகுதி உள்ளவர்களுக்கு அலுவலக உதவியாளர் (Office Helper) உள்முகத் தேர்வில் இளநிலை உதவியாளர் (நிர்வாகம்) Junior Assistant (Adm) வழங்கப்படாமல் இரண்டாண்டுகளுக்கு மேலாக கிடப்பில் கிடக்கும் நிலை.

இளநிலை உதவியாளரிலிருந்து உதவியாளர் Junior Assistant to Assistant (Adm) பதவி உயர்வுக்கான தகுதியுடையோர் பட்டியல் தயார் செய்யப்பட்ட நிலையில் காரணமின்றி காலதாமதமாவது ஏன் என்பது புதிராகத்தான் உள்ளது.

உதவியாளரிலிருந்து (நிர்வாகம்) நிர்வாக மேற்பார்வையாளர் (Adm) (Asst) to Adm. Supervisor) பதவி உயர்வுகளை தகுதிக்காண் அறிக்கை கோரப்பட்டு பெற்றுள்ளதும் நிலுவையில் உள்ளது.

நிர்வாக மேற்பார்வையாளரிலிருந்து உதவி நிர்வாக அலுவலர் பதவி உயர்வுக்குரிய பணிகள் (DPC) முடிந்த பின்னரும் உத்தரவு வழங்கப்படாமல் உள்ளது.

தலைமை பொறியாளர் பணியமைப்பு அலுவலகத்தில் பணியாற்றும் கண்காணிப்பாளர் (Superindent), செயலகப் பிரிவில் பணியாற்றும் பிரிவு அலுவலர் (Section Officer), மண்டல மற்றும் மேற்பார்வை, செயற்பொறியாளர் அலுவலகங்களில் பணியாற்றும் நிர்வாக மேற்பார்வையாளரும் (Adm Supervisor) ஒரேவிதமான பணியை மேற்கொண்டு வருகிறபோதிலும் ஊதியத்தில் முரண்பாடு, கண்காணிப்பாளருக்கும், பிரிவு அலுவலரும் ஒரே ஊதிய விகிதம், நிர்வாக மேற்பார்வையாளருக்கு வேறு ஊதிய விகிதம், இதை சரி செய்து தரும்படி பலமுறை முயற்சித்தும் பேசியும் பலனற்ற நிலை நிலவுகிறது.

இனிமேல் மின்சார வாரியத்தில் கோப்புகள் எழுதுவது கிடையாது, டிஜிட்டல் மயம் என பத்திரிகைகள் எழுதி வருகின்றன.

இனியும் காலம் தாழ்த்தாது கருத்தால் உழைக்கின்ற நிர்வாக பணியாளர்களிடம் பாரபட்சம் காட்டும் மாற்றாந்தாய் மனப்பான்மையை களைந்திட வேண்டும், மேலே குறிப்பிட்டுள்ள பதவி உயர்வுகளைத் தாமதமின்றி வழங்கிட வேண்டும் என்ற கோரிக்கை வாரியத்தை வலியுறுத்தி நிர்வாக பணியாளர்கள் வலிமையாக நிற்கிறார்கள் என்பதை வாரியம் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும்.

**ஊதிய உயர்வு**

01.12.2023 ஊதிய உயர்வுக்குரிய காலமாக இருந்தபோதிலும், பேச்சுவார்த்தைக்கான குழு இதுவரையில் அமைத்திடவில்லை, தொடர் வலியுறுத்தல் நம் தரப்பில் இருந்தாலும் 1.12.2019 முதல் வழங்கிட வேண்டிய ஊதிய உயர்வுக்கு 16.05.2023ல் ஒப்பந்தம் போட்டதில் சுமார் 10000 பேர் அடங்கிய கேங்மேன் மற்றும் வாரிசுப் பணியாளர்களுக்கு 6% ஊதிய உயர்வு மறுக்கப்பட்டதை கேட்டு தொடர்ந்து போராடிய நிலையில் நியாயமாக 6% அளித்திட வேண்டிய அவசியம் உள்ளது என வாரியம் கருதி வாரியக் கூட்டத்தில் ஒப்புதல் பெற்று அளித்திடுவதற்கான பணிகள் நடந்துள்ளதால் விரைவில் வாரியக்கூடம் (TNPDCL) நடத்தி ஒப்புதல் பெற்று அளித்திடல் வேண்டும்.

1.12.2019க்கான வேலைப்பளு பேச்சுவார்த்தை மூன்று மாதத்தில் முடிக்கப்படும் என்பதும் அலவன்சுகளுக்கான கமிட்டி அமைத்து தொழிற்சங்கத்துக்கு பேசப்படும் என்பதும் ஒப்பந்தத்தில் உள்ள ஷரத்துகளாகி உள்ளன.

ஊதிய உயர்வுக்கான நிலுவைத் தொகை இரண்டு தவணைகளில் வழங்கப்படும் என்ற உத்தரவாதம் முதல் தவணை முழுவதும் ஒரே நேரத்திலும் இரண்டாவது தவணையை மூன்று பாதியாகவும் தந்து நிலுவைத் தொகை பட்டுவாடா செய்துள்ள வாரியத்திற்கு நன்றியை தெரிவிப்போம்.

**கணக்கு மேற்பார்வையாளர் பதவி உயர்வு கானல் நீரா?**

உதவியாளர் (கணக்கு) பதவியிலிருந்து கணக்கு மேற்பார்வையாளர் (Accounts Supervisor) பதவி உயர்வு வழங்குவதற்கு தகுதிக்காண் அறிக்கை கோரப்பட்டு இரண்டு வருடத்திற்கு மேலாக கிடப்பில் போட்டுள்ள பதவி உயர்வு வழங்கிட தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

மின்கணக்கீட்டு பிரிவில் கணக்கெடுப்பும், பணம் வசூலும் நவீனமயப்படுத்தப்படுவதால் கணக்கீட்டுப் பிரிவின் பணிகளை மேற்பார்வையிடும் பணிகளுக்கான கணக்குப் பிரிவின் பணிகளை குறைத்திடும் போக்கு நிலவுவதால் கணக்கு மேற்பார்வையாளர் பதவி வழங்கப்படாது எழுதப்படாத காரணமாக சொல்லப்படுவதாக தெரிய வருகிறது.

Smart Meter வரவால் மின்வாரியத்திற்கு வருவாய் பெருகும் என்ற நம்பிக்கை விதைத்து மத்திய அரசின் திட்டத்தை மின்வாரியத்தில் அமல்படுத்திட ஆவலாய் உள்ளதை அறிய முடிகிறது. கணக்கீட்டு பிரிவு பணியாளர்களின் பணி என்பது கேள்விக்குறியாகும் என்பதோ கணினிக்கு இணையான Smart Meter பழுதடைந்தால் மின்வாரியத்திற்கு மிகுந்த நட்டத்தை விளைவிக்கும் என்பதையோ கணக்கில் கொள்ளாமல் உள்ளதுதான் கவலை கொள்ள செய்கிறது என்பதை உணரும் காலம் வரட்டும்.

**– தொழிலாளி**

**Tamil Nadu Power Distribution Corporation Limited**

**(ABSTRACT)**

PENSION - Dearness Allowance to the Pensioners and Family Pensioners - Revised rates of Dearness Allowance from 1st July, 2024 - Adoption of Government Orders in TNPDCL - Orders - Issued.

---

**(SECRETARIAT BRANCH)**

**(Per) FB TNPDCL Proceedings No. 5,** **Dated the 26th October, 2024**
Aippasi-9, Krothi Varudam,
Thiruvalluvar Aandu-2055.

**Read:**

1) (Per) FB TANGEDCO Proceedings No. 8 (SB), dated 07.06.2024.
2) G.O.Ms.No. 319, Finance (Pension), Department, dated 18.10.2024.

*****

**PROCEEDINGS:**

In the Proceedings first read above, among other were issued allowing 50% Dearness Allowance to the Pensioners/Family Pensioners of Tamil Nadu Generation and Distribution Corporation (now Tamil Nadu Power Distribution Corporation Limited) with effect from 01.01.2024.

2. In the Government Order second read above, orders have been issued revising the rate of Dearness Allowance from 50% to 53%, (3% increase) payable to the Pensioners/Family Pensioners of the State Government with effect from 1st July, 2024.

3. It has been decided to extend the same benefit to the Pensioners/Family Pensioners of TNPDCL, Accordingly, it is hereby ordered that the Pensioners/Family Pensioners of TNPDCL, be paid Dearness Allowance with effect from 1st July, 2024 at the following rates:-

| **Date from which payable** | **Revised rate of Dearness Allowance** (per month) |
|---|---|
| **1st July, 2024** | **53%** of Basic Pension/Family Pension. |

4. The revised rate of Dearness Allowance from 50% to 53%, ordered in para-3 above, for the period from 01.07.2024 to 31.10.2024 shall be paid to the Pensioners/Family Pensioners along with the Pension/Family Pension for the month of October 2024.

5. The amount of Dearness allowance involving a fraction of a rupee shall be rounded off to the next higher rupee, If such fraction is 50 paise and above and shall be ignored if it is less than 50 paise.

6. In the case of divisible Family Pension, the Dearness Allowance shall also be paid proportionately.

**(BY ORDER OF THE BOARD)**

**K. NANTHAKUMAR**
Chairman-Cum-Managing Director

# அகவிலைப்படி உயர்வு - உத்தரவு

(சுருக்கம்)

படிகள் - அகவிலைப்படி - தமிழ்நாடு மின்பகிர்மான கழகம், தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம், தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகம் மற்றும் தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழக பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு 01.07.2024 முதற்கொண்டு உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வீதம் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**(செயலகக் கிளை)**

**(நிலை) முழு வாரிய தமிழ்நாடு மின் பகிர்மான கழக செயல்முறை ஆணை எண். 04, நாள்: 26.10.2024**

ஐப்பசி-9-ம் நாள்,
குரோதி வருடம்
திருவள்ளுவர் ஆண்டு 2055

படிக்கப்பட்டது:

1. (நிலை) முழு வாரிய தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக செயல்முறை ஆணை எண். 03, நாள்: 13.03.2024.
2. அரசாணை (நிலை) எண். 317, நிதி (படிகள்) துறை, நாள்: 18.10.2024.

**செயல்முறைகள்:**

பார்வை 1ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக செயல்முறை ஆணையில் வாரியத்தின் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு திருத்தப்பட்ட அகவிலைப்படி கீழ்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது.

| வ.எண். | எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதத்திற்கு) |
|---|---|---|
| 1. | 01.01.2024 | அடிப்படை ஊதியத்தில் 50 சதவீதம் |

2. பார்வை 2-ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு ஆணையில், 01.07.2024 முதற்கொண்டு மாநில அரசு பணியாளர்களுக்கு கீழ்க்கண்ட திருத்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது:-

| வ.எண். | எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதத்திற்கு) |
|---|---|---|
| 1. | 01.07.2024 | அடிப்படை ஊதியத்தில் 53 சதவீதம் |

மேற்படி உயர்த்தப்பட்ட அகவிலைப்படி 01.07.2024 முதற்கொண்டு வழங்கப்படும் என்றும், ஜூலை 2024 முதல் செப்டம்பர் 2024 வரையிலான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை பணமில்லா பரிவர்த்தனை முறை மின்னணு தீர்வு சேவை மூலம் வழங்கப்படும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு மின் பகிர்மான கழகமானது, தமிழ்நாடு அரசின் மேற்காணும் ஆணையினைப் பின்பற்றி, தமிழ்நாடு மின் பகிர்மான கழகம், தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம், தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகம் மற்றும் தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழக பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு அகவிலைப்படியைக் கீழ்கண்டவாறு உயர்த்தி வழங்கிட ஆணையிடுவது:-

| வ.எண். | எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதத்திற்கு) |
|---|---|---|
| 1. | 01.07.2024 | அடிப்படை ஊதியத்தில் 53 சதவீதம் |

மேலும், ஜூலை 2024 முதல் செப்டம்பர் 2024 வரையிலான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை பணமில்லா பரிவர்த்தனை முறை மின்னணு தீர்வு சேவை (ECS) மூலம் அக்டோபர் 2024ஆம் மாத சம்பளத்துடன் வழங்கப்படும்.

4. அனுமதிக்கத்தக்க உயர்த்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிட அடிப்படை ஊதியத்துடன் தனிப்பட்ட ஊதியத்தையும் (Personal Pay) சேர்த்துக் கொள்ள வேண்டும். திருத்தப்பட்ட அகவிலைப்படியைக் கணக்கிடுகையில், ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை, அதாவது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின், அதனை அடுத்த ஒரு ரூபாயாகக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அதனைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

5. மேலே அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி தற்போது அகவிலைப்படி பெறும் முழுநேர பணியாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் மற்றும் திருத்தப்பட்ட ஊதிய விகிதம் ரூ. 4100-12500 பெறும் பணியாளர்களுக்கும் அனுமதிக்கத்தக்கதாகும்.

**(வாரியத்தின் ஆணைப்படி)**

**க. நந்தகுமார்**
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்

**சந்தாதாரர்கள் - உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கவனத்திற்கு**

நமது சங்க இதழான **''எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்''**-ல் தங்களது கருத்துகள், கட்டுரைகள், தங்கள் வட்டத்திற்குட்பட்ட தொழிலாளர்கள் மற்றும் சங்கத்திற்கான செய்திகளை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்திடுவீர்!

**நிர்வாக ஆசிரியர்,**
**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**
39/101, சிங்கண்ணா தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.
**✆ : 9841446621 : 8939152361**
**tnebemployeesfederation3600@gmail.com**

***குறிப்பு :*** *செய்திகள் வெளியிடுவது ஆசிரியக் குழுவின் முடிவிற்குட்பட்டது.*

## பாடல் (28) அலைப்பான் பிறவுயிரை ஆக்கலும்!

*அலைப்பான் பிறவுயிரை ஆக்கலும் குற்றம்*
*விலைப்பாலில் கொண்டூன் மிசைதலும் குற்றம்*
*சொலற்பால அல்லாத சொல்லுதலும் குற்றம்*
*கொலைப்பாலும் குற்றமே யாம்.*

**கருத்துரை**

கொன்று உண்பதற்காக ஆடு, மாடு, கோழி, பன்றி போன்ற பிற உயிரினங்களை இரைபோட்டு வளர்த்தல் குற்றமாகும்!

விலை கொடுத்து வாங்கி வந்து, பிற உயிரினங்களின் இறைச்சியை சமைத்துப் பக்குவப்படுத்தி உண்பதும் குற்றமாகும்!

சொல்லக் கூடாத, பண்பாடில்லாத, அருவருப்பான சொற்களைப் பிறரை நோக்கிச் சொல்லுதலும் குற்றமாகும்!

அதுபோல், மொழிக்கொலை, நட்புக் கொலை, பண்புக் கொலை, நம்பிக்கைக் கொலை போன்ற பிற கொலை வகைகளும் குற்றமேயாகும்!

**அருஞ்சொற்பொருள்:**

அலைப்பான் = கொன்று உண்பதற்காக; பிற உயிரை = ஆடு, மாடு, கோழி, பன்றி போன்ற பிற உயிர்களை; ஆக்கலும் குற்றம் = வீட்டில் வளர்ப்பதும் குற்றம்; விலைப்பாலின் = விலை கொடுத்து; ஊன் கொண்டு = இறைச்சியைப் பெற்று வந்து; மிசைதலும் குற்றம் = சமைத்து உண்பதும் குற்றமாகும்; சொலற்பால அல்லாத = சொல்லும் வகையின அல்லாத சொற்களை; சொல்லுதலும் குற்றம் = உரைத்தலும் குற்றம்; கொலைப்பாலும் = மொழிக்கொலை, நட்புக் கொலை, பண்புக் கொலை, நம்பிக்கை கொலை போன்றவையும்; குற்றமே ஆம் = குற்றமே ஆகும்.

# சனிக்கிழமைக்கும் பெருமாளுக்கும் என்ன தொடர்பு?

**- சிவநாச்சியார்**



ஏன் சனிக்கிழமைகளில் பெருமாள் கோவில்களில் கூட்டம் நிரம்பி வழிகிறது?

இதற்கான விடை பிரம்ம வைவர்த்த புராணத்தில் உள்ளது.

சூரியனுக்கு சுவர்ச்சலா, சாயா என இரண்டு மனைவிகள்.

சூரியனுக்கும் சுவர்ச்சலாவுக்கும் பிறந்தவர்கள் யமதர்ம ராஜாவும், யமுனா நதியும்.

சாயாவுக்குப் பிறந்தவர் சனீஸ்வரன்.

கண்ணபிரான் யமுனையில் உள்ள காளியனை அடக்கி யமுனா நதியைத் தூய்மையாக்கிய பின் அனைத்துத் தேவர்களும் யமுனையைப் போற்றத் தொடங்கினார்கள்.

கங்கையை விடப் புனிதமான நதியென அதைக் கொண்டாடினார்கள்.

அதைக் கண்ட சனீஸ்வரன் யமுனையிடம் வந்து, ''சகோதரியே! உன்னை மங்களமானவள் என எல்லோரும் கொண்டாடுகிறார்கள். ஆனால் என்னை முடவன் என்றும் அமங்களமானவன் என்றும் கூறுகிறார்களே. உன்னைப் போல நானும் மங்களகரமானவனாக ஆக வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டார்.

அங்கே வந்த நாரதர், ''சனீஸ்வரா! யமுனை கண்ணனின் திருவுள்ளத்தை மகிழ்வித்தாள். அதனால் மங்களகரமானவளாக இருக்கிறாள். நீயும் கண்ணனின் திருவுள்ளத்தை உகப்பித்தால் (மகிழ்வித்தால்) மங்களமாகி விடுவாய்!'' என்று கூறினார்.

''அவனை உகப்பிக்க (மகிழ்விக்க) நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று சனீஸ்வரன் கேட்டார்.

அதற்கு நாரதர், ''ஹோலிகா என்று இரணியனுக்கொரு சகோதரி இருந்தாள். அவளுக்குத் தீயால் சுடப்படாமல் இருக்கும் விசேஷத் தன்மை உண்டு.

பிரகலாதனைப் பல விதமான தண்டனைகளுக்கு உள்ளாக்கியும் அவன் அவற்றால் பாதிக்கப்படாமல் இருப்பதைக் கண்ட இரணியன், ஹோலிகாவிடம் பிரகலாதனை ஒப்படைத்தான்.

பிரகலாதனைத் தீயில் தள்ளிய ஹோலிகா, தானும் தீக்குள் இறங்கி அவனை வெளிவரமுடியாதபடி அழுத்தினாள்.

அப்போது நரசிம்மப் பெருமாள் ஹோலிகாவின் பிடியிலிருந்து பிரகலாதனைக் காத்து வெளியே அழைத்து வந்தார்.

ஹோலிகாவிடமிருந்து நரசிம்மர் பிரகலாதனைக் காத்த நாளைத்தான் ஹோலிப் பண்டிகையாக மக்கள் கொண்டாடு கின்றார்கள்.

அந்த ஹோலிகா பெண் என்பதால் நரசிம்மர் அவளைக் கொல்லாமல் விட்டுவிட்டார்.

இப்போது அவள் தன் சகோதரனான இரணியனைக் கொன்ற திருமாலைப் பழிவாங்கத் துடித்துக் கொண்டிருக்கிறாள்.

திருமால் கண்ணனாக அவதாரம் செய்ததை அறிந்து கோகுலத்துக்கு அவள் வந்துவிட்டாள்.

நாளை இங்கே ஹோலிப் பண்டிகை.

தன்னிடம் இருந்து பிரகலாதனை அவன் காத்த நாளான ஹோலிப் பண்டிகையன்று கண்ணனையும் அவன் தோழர்களையும் தீக்கு இரையாக்கிப் பழிதீர்க்கத் திட்டம் தீட்டியிருக்கிறாள்.

சனீஸ்வரா! நீ அந்த ஹோலிகாவைக் கண்டறிந்து அவளை எரித்துச் சாம்பலாக்கிவிட்டால், கண்ணனை மகிழ்விக்கலாம். அவன் அருளைப் பெறலாம். நீயும் மங்களகரமாக ஆகலாம்!'' என்றார்.

அடுத்தநாள் ஹோலிப் பண்டிகை.

கண்ணனும் அவன் தோழர்களும் பெரிய பெரிய கொள்ளிக் கட்டைகளை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைத்து, நரசிம்மர் மற்றும் பிரகலாதனின் திருநாமங்களைப் பாடி, ஹோலிகாவின் கொடும்பாவியை எரித்து ஹோலிப் பண்டிகையைக் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் கொள்ளிக்கட்டைகளுக்குள் ஹோலிகா ஒளிந்திருந்தாள்.

தீ மூட்டப்பட்டவுடன் கண்ணனையும் அவன் தோழர்களையும் உள்ளே இழுத்துவிட வேண்டும் என்று எண்ணிய அவள் மேல் சனீஸ்வரன் தன் பார்வையைச் செலுத்தினான்.

சனிப்பார்வை பட்டவுடனேயே ஹோலிகா தன் சக்திகள் அனைத்தையும் இழந்து விட்டாள். கண்ணன் தீ மூட்டினான். அத்தீயில் ஹோலிகா எரிந்து சாம்பலானாள்.

நாரதர் சனீஸ்வரனைக் கண்ணனிடம் அழைத்துச்சென்று நடந்தவற்றை விவரித்தார்.

அப்போது சனீஸ்வரனின் செயலுக்கு மனமுகந்த கண்ணன், ''சனீஸ்வரா! நீ இனிமேல் மங்களமானவனாகத் திகழ்வாய். உன் கிழமையான சனிக்கிழமையின் விடியற்காலை வேளை மிகவும் மங்களமானதாகக் கருதப்படும்.

அந்நாளின் திதியோ, நட்சத்திரமோ எதுவாக இருந்தாலும், சனிக்கிழமையின் விடியற்காலைப் பொழுது மங்களமானதாகவே கருதப்படும். 28-வது கலியுகத்தில் நான் திருமலையில் மலையப்பனாக வந்து தோன்றுவேன். சனிக்கிழமைகளில் என்னை வந்து தரிசிக்கும் அடியார்கள் வேண்டும் வரங்கள் அனைத்தையும் அருள்வேன்! என்று வரமளித்தான்.''

அதனால்தான் 'சனி உஷஸ்' (விடியல்) எனப்படும் சனிக் கிழமையின் விடியற்காலை வேளை மங்களமானதாகவும், அனைத்து சனிக்கிழமைகளும் பெருமாளுக்கு உகந்த நாட்களாகவும் விளங்குகின்றன.

❀

# TNEBEF - விருதுநகர் மின்பகிர்மான வட்டம் - செயற்குழு முடிவுகள்

தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் விருதுநகர் மின்பகிர்மான வட்டக் கிளையின் செயற்குழு கூட்டம் 19.10.2024 அன்று விருதுநகர் சங்க அலுவலகத்தில் வட்டக்கிளையின் தலைவர் திரு. S. இளங்கோவன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் ஒருமனதாக கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**திட்ட செயற்குழு முடிவுகள் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:-**

1. இந்தாண்டு டிசம்பரில் நடைபெறவிருக்கும் மாநில பொதுக்குழுவிற்கு விருதுநகர் கிளையின் சார்பாக திட்ட கோட்ட மற்றும் பிரிவு பிரதிநிதிகள் சேர்த்து மொத்தமாக 15 நபர்கள் கலந்து கொள்வார்கள் என முடிவெடுக்கப்பட்டது. அவர்களின் முகவரி பட்டியல் பொதுச் செயலாளருக்கு, பின்னர் தெரிவிக்கப்படும் என முடிவெடுக்கப்பட்டது.

2. எம்ப்ளாயீஸ் பெடரேசன் நியூஸ்திட்ட மற்றும் கோட்ட நிர்வாகிகளிடம் ஆயுள் சந்தா ரூ. 2000/- மற்றும் பிரிவு பிரதிநிதிகளிடம் ஆண்டு சந்தா ரூ. 200/- இம்மாத இறுதிக்குள் வசூல் செய்யும்படி முடிவெடுக்கப்பட்டது.

3. தொழிலாளர் சந்திப்பு இயக்கம் விருதுநகர் மின்வாரிய அனைத்து பிரிவு அலுவலகங்கள், உபமின்நிலையங்களில் மற்றும் கோட்ட மத்திய அலுவலகங்களில் தொழிலாளர்களை சந்தித்து அச்சடிக்கப்பட்ட நோட்டீஸ்களை வழங்கி இன்றைய வாரியத்தின் நிலைமையை எடுத்து கூறும்படி முடிவெடுக்கப்பட்டது.

4. தொழிலாளர்களை பிரிவு வாரியாக சந்தித்து, சங்க வளர்ச்சி நிதியாக ரூ. 500/- இம்மாத இறுதிக்குள் வசூல் செய்யும்படி முடிவெடுக்கப்பட்டது.

5. அனைத்து அலுவலகங்களில் உள்ள பணியாளர்களுக்கு ERP மூலம் அனைத்து பணப்பட்டுவாடா செய்யப்பட்டு வருகின்றனர். இதில் GPF மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு பணப்பட்டுவாடா செய்யப்பட்டதில் ERP-ல் சில தவறுகளால் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படாமல் பின்னால் விண்ணப்பித்து நிதி அனுமதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு பணப்பட்டுவாடா உடனடியாக வழங்கப்படுகிறது. முன்னால் விண்ணப்பித்து நிதி அனுமதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு தாமதமாக பணப்பட்டுவாடா செய்யப்படுகிறது. இதனால் தொழிலாளர்களிடையே சிரமங்கள் ஏற்படுகிறது. ஆகையால், அனைத்து மேற்பார்வை பொறியாளர் அலுவலகங்களில் உள்ள கணக்கு பிரிவு அலுவலர்களுக்கு உடனடியாக ERP-யில் நன்கு பயிற்சி பெற்ற அலுவலர்களை கொண்டு பயிற்சி அளிப்பதற்கு மாநில தலைமையை உரிய நடவடிக்கை எடுக்கும்படி இச்செயற்குழு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

6. விருப்ப மாறுதல் விண்ணப்பித்த கேங்மேன் தொழிலாளர்களுக்கு 10 சதவீதம் மட்டும் மாறுதல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து விருதுநகர் மாவட்டங்களுக்கு பணி மாறுதல் உத்தரவு பெற்ற கேங்மேன் தொழிலாளர்களுக்கு உடனடியாக பணிவிடுப்பு செய்வதற்கு மாநில தலைமையை உரிய நடவடிக்கை எடுக்கும்படி இச்செயற்குழு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

7. வாரிசு வேலை வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு தற்போது அந்தந்த மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்திலேயே உத்தரவு வழங்கும்படி தலைமை அலுவலகத்தில் இருந்து குறிப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்கண்ட குறிப்பாணை வழங்கப்படுவதற்கு முன்னர் நிலுவையில் உள்ள வாரிசு வேலை வேண்டி விண்ணப்பித்த வாரிசுதாரர்களுக்கு உடனடியாக வாரிசு வேலை வழங்குவதற்கு மாநில தலைமையை உரிய நடவடிக்கை எடுக்கும்படி இச்செயற்குழு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

8. 01.12.2023 முதல் புதிய ஊதிய உயர்வுக்கான பேச்சுவார்த்தை குழு இதுநாள் வரை அமைக்கப்படவில்லை. புதிய ஊதிய உயர்வு ஒப்பந்தம் கையெழுத்து இடும் வரை, தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணம் ரூ. 3,000/- வழங்க மாநில தலைமையை செயற்குழு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

9. பகுதி நேர பணியாளர்களுக்கு மருத்துவ காப்பீடு திட்டத்தில் சேர்த்திட மாநில தலைமையை உரிய நடவடிக்கை எடுக்கும்படி இச்செயற்குழு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

10. பாதுகாப்பு உபகரணங்கள் ரெயின்கோட் மற்றும் தளவாட பொருள்கள் மத்திய பண்டக சாலையில் கையிருப்பில் இல்லாத காரணத்தில், தொழிலாளர்கள் மிகுந்த சிரமங்கள் சந்திக்கின்றனர். இந்நிலை மாற மேற்கண்ட பொருட்கள் மத்திய பண்டக சாலையில் தேவையான அளவு கையிருப்பில் கிடைத்திட உரிய நடவடிக்கை எடுக்கும்படி இச்செயற்குழு மாநில தலைமையை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

11. தமிழக அரசு ஊழியர்கள் பணியிலிருக்கும்போது- இறந்தால், ரூ. 5,00,000/- ஆக வழங்கப்படுகிறது. ஆனால், மின்வாரிய பணியாளர்களுக்கு ரூ. 3,00,000/- ஆக வழங்கப்படுகிறது. இந்நிலை மாற தமிழக அரசு ஊழியர்கள் போல் மின்வாரிய ஊழியர்களுக்கும் மேற்கண்ட பயணப்பயன் பெற்றிட மாநில தலைமையை தொடர் நடவடிக்கை எடுக்கும்படி இச்செயற்குழு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

12. தமிழக அரசு ஊழியர்களுக்கு பணிக்கொடை ரூ. 25,00,000/- வழங்கப்படுகிறது. ஆனால், மின்வாரிய ஊழியர்களுக்கு ரூ. 20,00,000/- வழங்கப்படுகிறது. தமிழக அரசு ஊழியர்களின் பயணப்பட்டியல் 100% வழங்கப்படுகிறது. ஆனால், மின்வாரிய ஊழியர்களுக்கு 75% மட்டும் தற்போது வரைக்கும் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலை மாற தமிழக அரசு ஊழியர்கள் போல் மின்வாரிய ஊழியர்களுக்கும் மேற்கண்ட பயணப்பயன்கள் பெற்றிட மாநில தலைமையை உரிய நடவடிக்கை எடுக்கும்படி இச்செயற்குழு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## TNEBEF - தூத்துக்குடி பகிர்மானம் வட்டம் - செயற்குழு முடிவுகள்

1. தூத்துக்குடி பகிர்மானக் கிளையின் செயற்குழு தீர்மானத்தை ஏற்று திட்டப் பொதுக்குழுவுக்கு வருகை தந்து சிறப்பித்த மாநிலத் தலைமைக்கு தூத்துக்குடி திட்டக்கிளை நன்றி தெரிவிக்கிறது.

2. தூத்துக்குடி திட்ட சங்க பணிமனை திறப்பு விழா, கொடியேற்ற விழா இரண்டையும் சிறப்புக்குரியதாகும் வகையில் கலந்து கொண்டு சிறப்பித்த மாநில தலைமை, மாநில நிர்வாகிகள், சகோதர திட்ட நிர்வாகிகள் மற்றும் ஓய்வு பெற்றோர் அமைப்பினர் என கலந்து கொண்ட அனைவருக்கும் தூத்துக்குடி கிளை நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

3. சங்க பணிமனை கட்டுவதற்கு நிதி உதவி அளித்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும், குறிப்பாக ரூ. 25 ஆயிரம் நிதி வழங்கிய ஓய்வு பெற்றோர் அமைப்புக்கும் தூத்துக்குடி கிளை மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

4. தூத்துக்குடி சங்க பணிமனைக்கு இடம் ஒதுக்கீடு செய்து உதவிய முன்னாள் மேற்பார்வை பொறியாளர் திருமதி. G. குருவம்மாள் B.E. அவர்களுக்கும், உறுதியாக இருந்து உதவிய செயற்பொறியாளர் (பொது) திருமதி. ரெமோனா மற்றும் சிவில் பிரிவு அதிகாரிகளுக்கு இப்பொதுக்குழு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

5. தமிழ்நாடு மின்வாரிய பணியாளர்கள், அலுவலர்கள் மற்றும் அதிகாரிகளின் பணிப்பாதுகாப்புக்கும், ஓய்வூதிய பாதுகாப்புக்கும் எவ்வித உத்திரவாதமும் வழங்கப்படாத முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிட மறுத்து, தொழிலாளர் நலனை முன்னிறுத்தி எடுக்கப்பட்ட மாநில தலைமையின் முடிவினை தூத்துக்குடி பகிர்மான கிளை பாராட்டுகிறது.

6. 20.12.2023 வட்ட செயற்குழு தீர்மானத்தின்படி (தீர்.எண்: 11) நமது சங்கத்தை மத்திய தொழிற்சங்க அமைப்பான "United Trade Union Congress" (UTUC)-ல் இணைத்ததற்கு மாநில தலைமைக்கு இச்செயற்குழு வாழ்த்துதலையும், பாராட்டுதலையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது.

7. 01.12.2023 முதல் வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வை உடனடியாக வழங்கிட தகுந்த முன் முயற்சியை எடுக்கும்படி மாநில தலைமையை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

8. இளநிலை உதவியாளர் பதவிக்கு 10ம் வகுப்பு கல்வித் தகுதி என்று இருந்ததை எந்த துறையிலும் இல்லாத நிலையில் மின்வாரியத்தில் மட்டும் பட்டப்படிப்பு கல்வித்தகுதி என நிர்ணயம் செய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்திட முன்முயற்சி எடுப்பதுடன், பாதிக்கப்பட்ட பணியாளர்களுக்கு உடனடியாக இளநிலை உதவியாளர் பதவி உள்முகத் தேர்வு மூலம் கிடைக்கப் பெற உரிய நடவடிக்கை எடுக்கும்படி மாநிலத் தலைமையை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

9. 01.12.2019க்கு பின்னர் வாரியப் பணியில் சேர்ந்தவர்களுக்கும் ஊதிய 6% ஊதிய உயர்வு பெற்றுத்தர மாநிலத் தலைமையை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

10. நாளுக்கு நாள் மின்இணைப்புகள் அதிகரித்து வரும் நிலையில், போதிய கணக்கீட்டாளர் பணியிடங்கள் நிரப்பப்பட்டதால் கணக்கீட்டாளர்களுக்கு கூடுதல் பணிச்சுமையும், பதவி உயர்வு பெற்ற கணக்கீட்டு ஆய்வாளர்களும், வருவாய் மேற்பார்வையாளர்களும் கணக்கீட்டுப் பணியை செய்ய நிர்பந்திக்கப்படும் அவல நிலையை களைய மாநில தலைமை தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

11. களப்பணியில் காலியாக உள்ள 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காலி பணியிடங்களையும், ஒட்டுமொத்தமாக வாரியத்தில் காலியாக உள்ள 56 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காலி பணியிடங்களையும் நிரப்பிட தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி மாநிலத் தலைமையை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

12. அடிப்படை கட்டமைப்பு வசதியை ஏற்படுத்தித் தராமல் கைபேசி வாயிலாக மின்கணக்கீடு செய்யும்படி கணக்கீட்டாளர்களையும், கல்வித்தகுதி தளர்த்தி பதவி உயர்வில் உள்ள

களப்பணியாளர்கள் மொபைல் ஆஃப் மூலம் பணிகளை பதிவு செய்ய நிர்பந்திப்பதையும் இப்பொதுக்குழு கவலையோடு பார்க்கிறது. இந்நிலையை மாற்ற தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி மாநிலத் தலைமையை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

13. தூத்துக்குடி பகிர்மானத்தில் சுமார் 30க்கும் மேற்பட்ட பிரிவு அலுவலகங்களில் துப்புறவு பணியாளர்கள் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை. சுகாதாரப் பணியாளர் பணியிடங்கள் நிரப்பப்பட்ட தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி மாநிலத் தலைமையை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

14. கேங்மேன் பணியாளர்களின் பணித்தன்மை முறைப்படுத்தப்படாமல் பல்வேறு பணிகளில் ஈடுபடுத்துவதால் மின்விபத்துகள் வாயிலாக உயிரிழப்போர் எண்ணிக்கை அதிகரித்து வருவதை இப்பொதுக்குழு கவலையோடு பார்க்கிறது. கேங்மேன் பணியாளர்களின் பணித்தன்மையை முறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கும்படி வாரியத் தலைமையை வலியுறுத்தும்படி மாநில தலைமையை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

15. தேர்வு செய்யப்பட்டும், நாளது வரை நியமன உத்தரவு வழங்கப்படாமல் உள்ள 5 ஆயிரம் கேங்மேன் பணியாளர்களுக்கு உடனடியாக பணி நியமனம் வழங்கப்பட முன் முயற்சி எடுக்கும்படி பொதுக்குழு மாநிலத் தலைமையை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

16. பணி அனுமதி வழங்கப்படாமல் உள்ள அனைத்து 110 கிவோ துணை மின்நிலையங்களுக்கும் பணி அனுமதி வழங்கப்பட தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி மாநிலத் தலைமையை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

17. பணியாளர்களுக்கு வாரியம் வழங்கியுள்ள சிறு விடுப்பு சலுகையைக் கூட வழங்க மறுக்கும் நிர்வாகத்தின் போக்கினை இப்பொதுக்குழு கவலையோடு பார்க்கிறது. மனிதாபிமான முறையிலாவது அதிகாரிகள் பணியாளர்களின் விடுப்பு விசயத்தில் நடந்து கொள்ள தகுந்த ஆலோசனை வழங்கும்படி வட்ட நிர்வாகத்தை பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

18. வருவாய் பிரிவு பணியாளர்களை எந்த பகிர்மானத்திலும் இல்லாத நடைமுறையாக வட்ட அளவிலான ஒட்டுமொத்த ஆய்வு (Circle Mass Raid) பணியில் ஈடுபடுத்துவதை தவிர்க்கும்படி நிர்வாகத்தை பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

19. விநியோகப் பிரிவு மற்றும் துணை மின்நிலையங்களில் ஏற்படும் மின்விபத்துகளில் பணியாளர்கள் மீது குற்றச்சாட்டு சுமத்திய பின்னர் பணியிட மாற்றம் செய்யும் தவறான நடைமுறையை கைவிடும்படிநிர்வாகத்தை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது. குறிப்பாக சூரன்குடி துணை மின்நிலையத்தின் மின்பாதை ஆய்வாளர் திரு. அ. சேதுராமன் அவர்கள் மீது குற்றச்சாட்டு சுமத்தி குறிப்பாணை வழங்கிய பின்னர், பணியிட மாற்றம் செய்துள்ள உத்தரவை ரத்து செய்யும்படி இப்பொதுக்குழு நிர்வாகத்தை கேட்டுக் கொள்கிறது.

20. விருப்பமாறுதல் உத்தரவு பெற்ற பணியாளர்களை இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக பணிவிடுவிப்பு செய்யாமல் வைத்திருக்கும் நிர்வாக நடைமுறையை இப்பொதுக்குழு கண்டிக்கிறது. உடனடியாக உத்தரவுகளை நடைமுறைப்படுத்தும்படி பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

21. கோவில்பட்டி கோட்ட அலுவலகத்தில் ஆண், பெண் இருபாலருக்கும் ஒரே கழிப்பிடம் உள்ளதை மாற்றம் செய்து, தனித்தனி கழிப்பிட வசதி செய்து தரும்படி இப்பொதுக்குழு வட்ட நிர்வாகத்தை கேட்டுக் கொள்கிறது.

22. அவசரப் பணி என்ற பெயரில் பணி நாட்களில் செய்ய வேண்டிய பணிகளை விடுப்பு நாட்களில் செய்து முடிக்கும் நடைமுறையை கைவிடும்படி இப்பொதுக்குழு நிர்வாகத்தை கேட்டுக் கொள்கிறது.

23. வன்மம், தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாகவும் வழங்கப்படும் புகார் மனுக்கள் மற்றும் அநாமதேய புகார்கள் இவைகளின் பேரில் நடவடிக்கை எடுக்கும் முன்னர் முறையான விசாரணையின்றி, மின்நுகர்வோர் புகார் அளித்துள்ளார் என்பதாலேயே வாரியப் பணியாளர் மீது நடவடிக்கை எடுக்கும் நடைமுறையை கைவிடும்படி இப்பொதுக்குழு வட்ட நிர்வாகத்தை கேட்டுக் கொள்கிறது.

24. தேவையான தளவாடப் பொருட்களை தராமலும், பணிக்கு தேவையான ஆட்களை ஒதுக்கீடு செய்யாமலும், தளவாடப் பொருட்களை பணியிடத்திற்கு கொண்டு செல்ல போக்குவரத்து வசதி அல்லது வாடகை வாகனம் ஏற்பாடு செய்து தராமல் அனைத்து பணிகளையும் பணியாளர்கள் மீது சுமத்தும் நடைமுறையை உடனடியாக கைவிடும்படி இப்பொதுக்குழு வட்ட நிர்வாகத்தை கேட்டுக் கொள்கிறது.

25. மதிப்பீட்டின்படி தளவாடப் பொருட்கள் வழங்காமல் மின்நுகர்வோரிடம் தளவாடப் பொருட்களை வாங்கித் தரச் சொல்லி, பணியை செய்து முடிக்க பணியாளர்களை நிர்பந்தித்து, மறைமுகமாக பணியாளர்களை மின்நுகர்வோரிடம் கையேந்த வைக்கும் போக்கினை கைவிடும்படி நிர்வாகத்தை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

26. ஒதுக்குப்புறமாக ஆள் நடமாற்றம் இல்லாத இடங்களில் உள்ள துணை மின்நிலையங்களில் முறைப்பணியில் உதவிப் பணிக்கு பணியாளர் ஒதுக்கீடு செய்யாமல் பணி செய்ய வைக்கும் நடைமுறையை கைவிடும்படி இப்பொதுக்குழு நிர்வாகத்தை கேட்டுக் கொள்கிறது.

27. களப்பணியாளர்களுக்கு குறும தேதியில் (Crucial Date) பதவி உயர்வு வழங்குவதில் உள்ள தாமதங்களை தவிர்க்கும்படி இப்பொதுக்குழு வட்ட நிர்வாகத்தை கேட்டுக் கொள்கிறது.

28. வேலைப்பளுவை காரணம் காட்டி பெண் பணியாளர்களை முன்னிரவு நேரம் வரை பணியில் ஈடுபடுத்துவதை இப்பொதுக்குழு கவலையோடு பார்க்கிறது. வருங்காலங்களில் இந்த நடைமுறையை தவிர்க்கும்படி வட்ட நிர்வாகத்தை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

29. களப் பணியாளர்களுக்கு மின்துண்டிப்பு விபரங்களை தமிழில் வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்கும்படி நிர்வாகத்தை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

30. மின்விபத்து மற்றும் உடல்நலக் குறைவு காரணமாக மரணமுற்ற அனைத்து மின்கழக சொந்தங்களுக்கும் இப்பொதுக்குழு ஆழ்ந்த இரங்கலையும், அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறது.

31. உரிய உத்தரவு இன்றி வாய்மொழியாக பணியாளர்களை தற்காலிக பணி ஒதுக்கீடு செய்யும் நடைமுறையை கைவிடும்படி இப்பொதுக்குழு வட்ட நிர்வாகத்தை கேட்டுக் கொள்கிறது. குறிப்பாக துணை மின்நிலையங்களுக்கு இவ்விதம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருவதை கவனத்துக்கு கொண்டு வருகிறோம்.















Registered with Registrar of News Papers for India RNI No. TNBIL/2018/76375 (R.Dis No. 599/2018)
Postal Registration No. TN/ARD/106/2024-2026, WPP Licence No. : TN/PMG(CCR)/WPP/607/2024-2026
Posted at Egmore RMS (Patrika Channel) Date of Publishing Second week of every month
Posted on 15-17th of every month - Posted on 16.11.2024










Printed by D.Babu, Published by A.Sekkizhar on behalf of Tamil Nadu Electricity Board Employees Federation
39/101 Singanna Street, Chintadripet, Chennai 600002
and Printed at Sri Raj Cine Printers No.177/72, Singanna Street, Chintadripet, Chennai 600002.
**Editor : A. SEKKIZHAR**